Registered No. M. 2330 'SIDDHANTHAM
Vol. 29—No. 7

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'நன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 29 | துன்முகி ஆடி 1956 ஜுலை | இதழ் 7

உள்ளுறை பக்கம்

பத்திராசிரியர் : C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
உதவிப் பத்திராசிரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
10, மான்டீத் ரோட், எழும்பூர், சென்னை-8

ஆண்டுச் சந்தா ரூபா 3 தனிப்பிரதி அணு 4

செய்தித் திரட்டு

சேக்கிழார் விழாக்கள்

10, 11, 12—6—'56, : தேவகோட்டை சேக்கிழார் திருநாட்கழகம். காசிமடம் இளவரசு, வித்துவான், மகாலிங்கத்தம்பிரான் தலைமை. வீரசிவம், ஆறுமுகநாவலர், துரைசாமி ஐயர், G. சுப்பிரமணிய பிள்ளை முதலியோர் பேச்சுகள்.

11-6-'56 : சேலம் சன்மார்க்க மாதர் சங்கம் மூன்றாவது ஆண்டுவிழா. சித்பவானந்தர் தலைமை. கிரிதாரிபிரசாத் பேச்சு.

12—6—'56 : சேக்கிழார் திருப்பணிக் கழகம், குன்றத்தூர். தருமபுரம் சோமசுந்தரத் தம்பிரான் வாழ்த்துரை, தலைவர்கள் : ட்ரோஜன் அண்ணாமலை செட்டியார், ச. சச்சிதானந்தம் பிள்ளை, இளவழகனார், K. பாலசுப்பிரமணிய ஐயர், புலவர் முருகவேள் முதலிய பல புலவர்கள் பேசினார்கள்.

23, 24—6—'56 : திருக்குறள் கழகம், சேலம். பதினேழாம் ஆண்டுவிழா. ஆசிரியர் வ. சுப. சைய பிள்ளை தலைமை. அவருக்குப் பொன்னாடை போர்த்துதல் நடைபெற்றது. அன்னாரின் தலைமையில் பட்டிமன்றம் நடைபெற்றது. ஆள்வினையா ? ஊழ்வினையா ? என்ற கேள்வி தர்க்கிக்கப் பட்டது.

24—6—'56 : திரிசிரபுரம் சைவசித்தாந்த சபை எழுபத்தியொன்றாம் ஆண்டு நிறைவுவிழா. தலைமை காசிமடம் மகாலிங்கத்தம்பிரான். ஆலாலசுந்தரஞ் செட்டியார், இராம- கோவிந்தசாமிப் பிள்ளை, நடேச முதலியார் பேச்சுகள்.

25—6—'56 : சேலம், குகை மாதர் சங்கம். பன்னிரண்டாவது ஆண்டு துவக்கவிழா. தலைமை : திருமதி. அ. கு. காமாட்சியம்மாள். பிருந்தாதேவி பேச்சு.

26—6—'56 : செவ்வண்ணன்பட்டி (சிரவணபுரம்) கௌமார மடாலயம் தண்டபாணி சுவாமிகள் ஐம்பத்தெட்டாவது குருபூஜை. மாவட்ட நீதிபதி சோமசுந்தரம் பிள்ளையவர்கள் தொடக்கவுரை. சிறப்பு நடுவர் கந்த நரசிம்மஞ் செட்டியார், மாவட்டத்துணைத் தலைவர் பாஸ்கரத் தொண்டைமான் சொற்பொழிவுகள். திரு. அருணாசலத் தொண்டைமான் அவர்கள் இயற்றிய வண்ணப்பாட்டு வெளியிடப்பட்டது.

Regd. M. 2330

உ
சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாரியைஉள் நாடு

மலர் 29 | துன்முகி ஆடி 1956 ஜூலை | இதழ் 7

உயிரும் ஆன்மாவும்

[ஆசிரியர்]

1. **வரையறை** :—உலகில் உள்ள பொருள்கள் இரு வகைப்படும். உயிர் உள்ளவை, உயிர் இல்லாதவை என்பன. உயிர் உள்ளவை தோற்றம், வளர்ச்சி, இறுதி இவைகளைக் கொண்டிருக்கும். உயிர் இல்லாதவைகளுக்கு இந் நிகழ்ச்சிகள் இல்லை. ஆனல் சிற்சில சமயங்களில் மாறுதல்கள் அடையும். உயிர் உள்ளவை தன்னந்தானே இயங்கும் ஆற்றல் பெற்றிருக்கும். உயிர் இல்லாதவை அவ்வகை ஆற்றல் பெற்றிருக்கா. உயிர் உள்ளவை உயிர் நீங்கினல் உயிர் இல்லாதவை ஆகும். ஆனல் உயிர் இல்லாதவை ஒருக்காலும் உயிர் உள்ளவை ஆகா. உயிர் உள்ளவைகளுக்கு அறிவு உண்டு. உயிர் இல்லாதவைகளுக்கு அறிவு இல்லை. உயிர் இல்லாதவை ஒரே நிலையில் இருப்பன. உயிர் உள்ளவை படிப்படியான நிலைகளைக் கொண்டுள்ளன. இந்த வேறுபாடுகளை நம் புலன்களைக் கொண்டு எளிதில் அறியலாம்.

இனி ஆன்மா என்பது எது என்ற கேள்வி பிறக்கிறது. பொது மக்கள் ஆன்மாவும் உயிரும் ஒன்று என்றே மயங்கிப் பேசுகிருர்கள். தமிழ் வல்லவர்களும் ஆன்மா என்ற சொல்லுக்கு உயிர் என்றே பொருள் உரைக்கிருர்கள். ஆன்மா என்ற சொல் வடமொழி என்றும் உயிர் என்பது அதற்கு இணையான தமிழ் மொழி என்றும் கூறுகிருர்கள். இந்த

ஒற்றுமை சொல் வழக்கத்திலும் இலக்கியத்திலும் இருக்கலாம். ஆனால் தத்துவ ஆராய்ச்சியிலும் சமய வழக்கிலும் இவ்விரண்டும் வெவ்வேறு என்று அறியவேண்டும். உயிர் என்பது ஆறுவகை வேறுபாடுகளுடைத்தாய் அவைகள் படிப்படியாய் ஓரறிவுயிர் முதல் ஆறறிவு உயிர்வரை பிரிவினைப்பட்டு உடலை இயக்கிவைக்கும் ஒரு நிலை என்று அறியவேண்டும். அதற்குத் தோற்றமும் வளர்ச்சியும் இறுதியும் உண்டு என்று முன்னர் கூறியுள்ளோம். ஆனால் ஆன்மா என்பது அப்படிப்பட்டது அல்ல. அதற்கு ஆதியும் அந்தமும் இல்லை. எப்போதும் அழிவு இல்லாமல் இருப்பது. உயிர் மறைந்தாலும் ஆன்மா மறையாது. இந்த வேற்றுமையில் இவ்விரண்டையும் பிரித்து அறியவேண்டும்.

2. நமது சமயக் கூற்று:—நமது நாட்டுச் சமயங்கள் இவ்விரண்டையும் வேறு பிரித்துக் கூறுகின்றன. அவற்றில் சைவ சமயமோ மிக நன்றாக அவ்வேறுபாட்டைக் கூறுகின்றது. உயிர் உள்ள பொருள்களில் உடலும் உயிரும் வேறுபடுத்திக் கூறினாலும் இவ்விரண்டையும் நாம் அறியக்கூடும். உடலை ஐம்புலன்களால் அறியலாம். கண்ணில் காணலாம், காதில் கேட்கலாம், மூக்கில் முகரலாம், நாக்கில் சுவை அறியலாம், தோலில் தொடலாம். ஆகவே இவ்வாறு உடலை அறிதல் எளிது. அது போலவே உயிரையும் நுண்ணறிவினால் அறியலாம். உயிர் இருக்கிறதா இல்லையா என்பதை விரல்களால் தொட்டும், நாடிக் கருவியினால் அளந்தும் பார்க்கலாம். ஆகவே உடலையும் உயிரையும் ஐம்புலன்களின் உதவியைக் கொண்டு அறியலாம். ஆனால் ஆன்மா என்பது இப்புலன்களால் அறியப்படாதது.

ஆன்மா என்றது ஒன்றுண்டு என்று நமது சமயங்கள் கூறுகின்றன. அது உள்ள பொருள் அல்லது உண்மைப் பொருள் என்று சைவ சித்தாந்தம் வற்புறுத்துகிறது. அதனை ஐம்புலன்களின் அறிவைக்கொண்டு அறிய முடியாது. நமது உள்ளொளி கொண்டுதான் அறியவேண்டும். ஐம்புலன்களால் அறிய முடியாதாதலால் அவ்விதமான ஒரு பொருள் இல்லை என்று சார்வாகம் (நாத்திகம்) கூறுகிறது. அதனைக் கண்டுபிடிக்கவில்லை யாதலால் எப்படி நம்புகிறது என்று விஞ்ஞானம் கேட்கிறது. ஆனால் அது உண்டு என்றும் அதனைச் சாதனையால் அறியமுடியும் என்றும்

சித்தாந்தம் கூறுகிறது. சாதனை பெறுதவர்கள் நூல் ஆதாரம் கொண்டுதான் அதனை நம்ப வேண்டும். உலகில் பெரும்பான்மையான மக்கள் இதனை நம்புகிறார்கள்.

உடலில் உள்ள பகுதிகளைக் கூறும்போது இது எனது கை, இது எனது கண் என்று வேறுபடுத்திக் கூறுகிறோம். ஆகவே உடல் பகுதிகள் வேறு நாம் வேறு என்று உணருகிறோம். இது எனது உணர்ச்சி, இது எனது அறிவு என்று ஐம்புலன்களையும் வேறுபடுத்திப் பேசுகிறோம். அது போலவே இது எனது உயிர் என்று பேசும்போது அதனால் உடலை இயக்குவிக்கும் ஒரு நிலை என்று அதனை வேறு படுத்திப் பேசுகிறோம். இவ்வாறு உணரும்படியான அறிவு தான் ஆன்மா என்று சிவஞான போதத்தில் இலக்கணவியல் சூத்திரங்கள் நிரூபிக்கின்றன. இந்த வகையில் சித்தாந்த நூல் ஆன்மாவின் உண்மையையும் அதன் இலக்கணங்களையும் கூறுகின்றது. அறியப்படாத போதிலும் ஆன்மா வானது மூவகைப் பிரமாணங்களின் ஆதாரங்களைக் கொண்டு உணரப்படுகின்றது.

3. பிற சமயங்கள் :— நமது நாட்டில் வழங்கும் பிற சமயங்களில் கடவுள் கொள்கை உள்ள சமயங்கள் வைணவமும் மாத்வமும் சுமார்த்தமும் ஆகும். அவைகளிலும் உயிருக்கும் ஆன்மாவிற்கும் வேற்றுமை கூறப்படும். புறச் சமயங்களான சமணமும் பௌத்தமும் கடவுளைப் பற்றிய சிந்தனை இல்லாமற்போன போதிலும், உயிரை விட்டு ஆன்மா பிரிக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லும். ஆனால் கடவுள் கொள்கையில்லாத சார்வாக சமயத்தில் ஆன்மாவே ஒத்துக்கொள்ளப் படவில்லை. ஐம்புலன்களும் ஐம்பூதங்களே ஒத்துக்கொள்ளப் படுகின்றன. கடவுள் இல்லாக் கொள்கை நமது நாட்டில் மட்டுமல்ல, மற்ற எல்லா நாடுகளிலும் உண்டு. தற்போது மட்டும் அல்ல. எல்லாக் காலங்களிலும் இருந்திருக்கிறது. தற்போது தென்னாட்டில் கடவுள் இல்லாக் கொள்கை நிரம்பப் பரவி வருகிறது என்ற எண்ணம் பலபேருக்கு உண்டு. பல மேடைகளிலும் பேசிவருகிறார்கள். இது படித்த இளைஞர்களிடம் ஏற்பட்டிருக்கும் உணர்ச்சி ஆகும். உண்மையில் அந்த எண்ணம் சரியானதல்ல. தென்னாட்டிலே தற்போதைய புள்ளிவிவரங்களை எடுத்துப் பார்த்தால் எது

அதிகம் பரவிவருகிறது என்று தெளிவாக அறியமுடியும். ஒரு எடுத்துக்காட்டுக் கூறுவோம். பொதுமக்களிடம் கடவுள் உணர்ச்சி காட்டக்கூடிய சின்னங்கள், கோயில் செல்லுகை, அர்ச்சனை செய்தல், காவடி எடுத்தல் முதலியவை. இவைகளைக் கணக்கு எடுத்து அளவிடக் கூடும். திருத்தணிகையில் சென்ற 10 ஆண்டுகளில் மும்மடங்கு காவடிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. பழனி, திருச்செந்தூர் போன்ற இடங்களில் ஆராதனைகள் பன்மடங்கு ஏறியிருக்கின்றன. கோயில் செல்லுகையில் முன்னைவிடத் தற்போது பல மடங்கு பெருகியிருக்கின்றது இதனைக் கூறின் அறிவில்லாதவர் செய்கைஎனக் கூறலாம். எனினும் உண்மையில் முன் காலத்தைவிடத் தற்போது ஆத்திகம் குறையவில்லை எனலாம். ஆகவே பொதுவாக, வெறும் உயிரில் மட்டுமன்றி அதற்கு வேறாக உள்ள ஆன்மாவிலும் மக்கட்கு நம்பிக்கை உண்டு எனலாம்.

இனி ஆசியாக் கண்டத்து முக்கிய மதங்களாகிய புத்தசமயம, சின சமயம் (கன்பூசியசு), ஜப்பானிய சமயம் (ஷிண்டோ) இவைகளிலும் ஆன்மா உண்டு என்று கொள்ளப்படுகிறது.

இவை மட்டுமேயன்றி அமெரிக்காக் கண்டத்து மெக்சிகோ, பெரு, மாயா, சிகப்பு இந்தியர் இவர்களுடைய பண்டை மதங்களிலும் ஆன்மா உண்டு என்றே கொண்டிருந்தார்கள். இறந்தால் ஆன்மாக்கள் வேறு உலகங்களுக்குப் போகின்றன. பின்னும் பிறக்கின்றன என்றும் கூறப்படுகின்றது. ஈஜிப்டு தேசத்துப் பண்டை மதத்திலும், கிரீக்கு, உரோமானிய மதங்களிலும் ஆன்மா மேல் உலகங்களுக்குச் செல்லுகின்றன. மேலும் தேவர்களும் உலகில் பிறந்து மக்களுக்கு உதவிகள் புரிகின்றார்கள் என்று கூறுகிறார்கள். ஈஜிப்டில் நசிரியசு, ஐசிசு, ஹோரசு என்ற தேவர்கள் உலகில் பிறந்து மனிதர்கள் ஆகி வாழ்ந்தார்கள், பிறகு மேல் உலகத்திற்குச் சென்றார்கள் என்று கூறப்படுகின்றது. ஆகவே, அவர்களிலும் ஆன்மா உண்டு என்ற நம்பிக்கை உண்டு அல்லவா ?

4. சித்தியன் மதங்கள் :—யூதர், கிரிஸ்தவர், இசுலாமியர் இவர்களுடைய சமயங்கள் சித்திய சமயங்கள்

என்னப்படும். இவைகளே உலகில் பெரும்பகுதி சூழ்ந்திருக்கின்றன. இச்சமயங்களில் மனிதர்களுக்கு உடலேயன்றி ஆன்மாவும் உண்டு. இது வெறும் உயிரன்று. உயிருக்கு உள்ளே இருப்பது. இவ்வான்மா அழியாது. உடல் இறந்தபிறகு ஆன்மா கடவுள் தீர்ப்புநாள் மட்டும் காத்துக்கொண்டிருக்கும். அத்தீர்ப்பு நாளில் உலக வாழ்வில் செய்த நன்மை தீமைகளுக்கேற்றபடி சுவர்க்கமோ நரகமோ அடையும். மற்ற பிராணிகள் எல்லாம் ஆன்மா இல்லாதவை. அவைகளுக்குச் சுவர்க்கமோ நரகமோ பின் வாழ்வோ கிடையாது. அவைகளின் உடல்கள் மனிதனுடைய உணவிற்காகப் படைக்கப்பட்டவை. கர்மம், மறுபிறப்பு இவைகள் இல்லை.—இந்தக் கொள்கைகளோடு அந்த மூன்று மதங்களும் விளங்குகின்றன. இந்தக் கொள்கைகளுக்கு ஏற்றபடி சமயச்சடங்குகளும் விழாக்களும் நடைபெறுகின்றன. எடுத்துக் காட்டாக உடல் இறந்த பிறகு அது புதைக்கப்படும். ஆன்மா அதனை ஒட்டியே காத்துக்கொண்டிருக்கும். தீர்ப்பு நாளின்போதுதான் அது இறைவனிடம் செல்லும். தீர்ப்பு என்ன ஆகுமோ என்று நடுங்கிக்கொண்டிருக்கும். இதைப்போன்ற நம்பிக்கைகள் அம்மதங்களில் உண்டு.

மேலும் எல்லா உயிர்களும் மனிதனுக்காகப் படைக்கப்பட்டவை ஆதலால் அவ்வுயிர்களை மனிதன் கொன்று அவற்றின் உடல்களை உண்ணலாம். இதில் பாவம் இல்லை. இந்திய மதங்களிலோ உயிர்வதை கூடாது. அவற்றின் உடல்களை உண்ணுவதால் பாவம் ஏற்படும். ஏனெனில் அவ்வுயிர்களுக்கும் ஆன்மா இருப்பதினால் என்று கூறப்படும்.

மறுபிறப்பு என்பது அச்சமயங்களில் இல்லை. வினைத்தொடர்பு இல்லை. ஆகவே ஒரு உயிர் என் குருடாகவும் ஒன்று செவிடாகவும் ஒன்று முடமாகவும் ஒன்று ஏழையாகவும் ஒன்று செல்வவானாகவும் பிறக்கின்றனவோ காரணம் கூற இயலாது. இறைவனுடைய திருக்குறிப்பு என்று மட்டும் அச்சமயங்கள் உரைக்கும். இந்த வகைகளிலும் பல வேறுபாடுகள் உண்டு. ஆனால் மனிதர்களுக்கு ஆன்மா உண்டு என்ற ஒரு பெரும் கொள்கை மட்டும் கைவிடாது கொள்ளுகின்றன.

5. கலையியல்:—இனி, தற்கால விஞ்ஞானம் எதைக் கூறுகிறது. எல்லா உயிர்களுக்கும் உடல் உண்டு, உயிர் உண்டு, இந்த உயிர் உடலிலிருக்கும் உறுப்புக்களை ஆட்டி வைக்கும் ஒரு ஆற்றல். அது வலிவோடு இருக்கும் மட்டும் உயிர் இருக்கும். தளர்ந்துபோயின் உயிர் மறையும். பிறகு உடல் அழிந்துபோகும். இது இயற்கை. உயிரைத் தவிர ஆன்மா என்ற தனித்த பொருள் ஒன்று இருப்பதாக நிரூபிக்கப்படவில்லை. அது நிரூபிக்கப்படும் வரையில் அதனை நம்புவதற்கு வகையில்லை. உயிரை உண்டுபண்ணுவதற்குப் பலவகை முயற்சிகள் செய்தும் இன்னமும் வெற்றி கிடைக்கவில்லை. இதுதான் விஞ்ஞானத்தின் முடிவு.

உயிர்களின் பெருக்கம் சுக்கிலம் சுரோணிதத்தின் கூட்டால் உண்டாவது. இதுவும் இயற்கை. இவ்வாறு உண்டாகும் புது உயிருக்கு ஆன்மா இருக்கவேண்டும் என்ற நியதி இல்லை. மக்களில் கூன், குருடு முதலிய விகாரங்கள் ஏற்படுவதற்குத் தாய் தகப்பன்மார்களின் ஒழுங்கீனங்களே காரணம். ஆகவே மறு பிறப்பு வேண்டும் என்ற அவசியம் இல்லை. இவ்வகையான விதிகளே விஞ்ஞானிகளால் கொள்ளப்படும் கொள்கைகளாகும்.

6. முடிபு:—ஆகவே மேலே கூறிய வகைகளில் உலகில் பலவகை சமயங்களும் உயிர் ஆன்மா இவைகளைக் குறித்து என்னென்ன கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன என்று அறியலாம். இவைகளைச் சைவ சித்தாந்தக் கொள்கைகளுக்கு ஒத்திட்டு ஆராய்ந்து பாருங்கள். எவை சிறப்புடையனவாகத் தோன்றுகின்றனவோ பகுத்தறிந்து அளவிட்டுப் பாருங்கள். இந்த முடிவை நேயர்களுக்கே விடப்பட்டது.

——

தூத்துக்குடி, சைவசித்தாந்த சபையின்
72-ஆம் ஆண்டுவிழாத்

தலைமை உரை

மா. பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல்.

(மலர் - 29 ; இதழ்-6 ; 272-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியலில்போற்றல் பெறுவதே சைவர்கள் முதன்முதலாகச் செய்யவேண்டியது. அரசியலில் செல்வாக்கிருந்தபோதெல்லாம் சைவ சமயம் உயிர்நிலையில் இருந்தது. சமண் இருளில் மூழ்கிக்கிடந்த இப் பாண்டி நாடு ஒரு கைந்நொடிப் பொழுதில் சைவமாக மாறிவிட்டது. கூன் பாண்டியன் திருநீறணிந்து சைவன் ஆயினன். "மன்னனன் நீறணிந்தான் என்று மற்றவன் மதுரை வாழ்வார், துன்னி நின்றார்கள் எல்லாம் தூய நீறணிந்து கொண்டார்." அப்பர் சுவாமிகள் வரலாற்றில் மகேந்திரவர்மன் சைவனாக மாறியபிறகு, சைவம் வளர்த்த செய்தியைப் பெரியபுராணம் கூறுகின்றது. முதற் குலோத்துங்க சோழன் ஆட்சியில், சைவம் பெற்ற உயர்வும், புறச்சமயங்கள் பட்ட கஷ்டங்களும் சரித்திர உண்மை நிகழ்ச்சிகளாகும்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் ஆயிரக்கணக்கான நூல்களில் தத்துவ ஆராய்ச்சி வளம் பெற்றுள்ளது. சைவத்தில் இந்த வளப்பத்திற்கிடமுண்டோ என்று வினவுவர் ஒரு சாரார். "தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா, இன்று தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா," "நடுவாம் தன்மையினர் பழமை அழகாராய்ந்து தரிப்பர்" என்று எங்கள் உமாபதி சிவனார் 600 ஆண்டுகட்கு முன் கூறியதை மறத்தலாகாது. பழமை ஆராய்ச்சியை இவ்வளவில் நிறுத்தி, புதிய புதிய கருத்துக்களுக்கு சைவத்தில் இடமுண்டா என்பதைச் சிறிது காணலாம். Dialectical Materialism, Marxism, Communism, முதலிய கொள்கைகளை நுட்பமாக அறியச் சில நூல்களைப் பயின்றேன். பயிலும்போது இக் கொள்கைகட்கும் சைவத்திற்கும் உள்ள பல ஒற்றுமை நயங்களைக் கண்டேன். முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய், பின்னைப் புதுமைக்கும், பேர்த்தும்

அப்பெற்றியதாய் நிற்பது சைவம். "விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயம் செய்தே எரிவினாற் சொன்னரேனும் எம்பிரார்க் கேற்றதாகும்" என்று அப்பர் பெருமான் அன்றே சொல்லி வைத்தார். 1. Marxism சற்காரிய வாதத்தை ஒப்புக்கொள்கிறது. பௌதிகப் பொருளின் முக்கிய இலக்கணம், அஃதொரு தூலப்பருப் பொருளாயிருத்தல் (The most important property of matter is its being objective reality) எனக்கூறி மாயாவாதிகள் Idealists முதலியோர் கொள்கைகளை மறுக்கிறது. (2) மாறுபட்டவை ஒன்றியிருத்தல் (The unity of opposites) என்ற மற்றொரு கொள்கையை Marxism ஆதரிக்கிறது. ஆன்மா சதசத்து, சிவன் அருவுருவுமல்லன் சித்தினோடசித்து மல்லன், உலகெலாமாகி வேறாய் உடனாய் நிற்பவன் முதலிய கொள்கைகளில், மாறுபட்டவை ஒன்றியிருத்தலைக் காணலாம். (3) குணம் தொகையாகவும், தொகை குணமாகவும் மாறுபடும் (The passage of quality into quantity & vice versa) என்பது பொது உடைமையின் மற்றொரு கொள்கை. தோற்றமுறையில் சூக்குமப் பொருள் தூலமாகும், ஒடுக்க முறையில் தூலம் சூக்குமம் ஆகும் என்று, முப்பத்தாறு தத்துவங்களைத் தோற்ற ஒடுக்க விபரங்களோடு கூறும் சித்தாந்த நுட்பம் இதனை அடிப்படையிற் கொண்டது. தூல உடலைத் தமது அனுபவ முதிர்ச்சியால் கண்ணிமைப் போதில் சூக்குமத்தில் ஒடுக்கி, உலகவர் கண்முன்னே மறைந்த மாணிக்கவாசகர் காட்டிய சாகாக்கலையும் இதனை வலியுறுத்தும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் படிமுறையிலும் இக்கொள்கை மிளிர்கின்றது. கீழுள்ள படியில் நின்று செய்யும் வழிபாட்டினால் வரும் அனுபவத்தின் ஈட்டம் ஒரு பக்குவ விசேடத்தையும் நுண்ணுணர்வையும் உண்டாக்கி, மேலுள்ள படிக்குச் செலுத்துவதை மாதவச் சிவஞான யோகிகள் தமது மாபாடியத்தில் 8-ம், சூத்திரத்து முதல் அதிகரணத்தில் அழகாக விவரிக்கிறார். (4) எதிர் மறையைத் துறைப்படுத்தும் எதிர்மறை (Negation of the Negation) என்பது Marxism கூறும் வேறொரு கொள்கையாகும். இது Sublimation அல்லது மடை மாற்றம் என்று சைவத்தில் கையாளப்பெறும் மிக முக்கியமான ஒழுக்க

முறை. நமது ஆன்மலாபத்திற்கென உபயோகிப்பதற்கு, ஐம்புலன்கள் கருவிகளாக உள்ளன. ஆனால் இதற்கு மாறாக அவை "ஓர ஒட்டார், ஒன்றை உன்ன ஒட்டார், மலரிட்டு உனதாள் சேர ஒட்டார், ஐவர்" என்று அருணகிரிநாதர் வருந்திக் கூறும் குறும்புகளைச் செய்கின்றன. இங்கே புலன்களின் எதிர்மறை (Negation) காணப்படுகின்றது. அவைகளைத் தங்கள் வசமே விட்டுவிடாமல், நம் வசம் ஆக்கி, இறைவழிபாட்டிற் பயன் படுத்துவதே துறைப்படுத்தும் எதிர் மறையாகிய (Negation of the Negation) ஆகும். திருமூல நாயனார் இதையே "தானே புலன் ஐந்தும் தன் வசம் போயிடும், தானே புலன் ஐந்தும் தன்னில் மடை மாறும் என்கின்றார். மேல்நாட்டு அறிஞர்கள் இந்த மடைமாற்றத்தையே "Sublimation of the Instincts" என்பர். இதில் ஒரு பகுதியே அகத்துறையில் அமைந்த அருட்பாடல்களின் உட்கருத்தாகும்.

உயிர் தன்னை நாயகியாகவும், இறைவனை நாயகனாகவும் எண்ணித் தனது ஆண் பெண் புணர்ச்சி யுணர்ச்சியை (sex instinct நாட்டத்தை)த் தூய்மையாக்கிப் பரிசுத்தமான பேரின்பம் அனுபவித்தலே இம்மடைமாற்றத்தின் பெரும் பயனாகும். "கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள" எனும் உணர்ச்சியை மாற்றி உயர்த்தி "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பரும் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக......இந்து வாழ் சடையான் ஆடும் தனிப்பெருங்கூத்தின் வந்த பேரின்பத் துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்வதே" இம் மடைமாற்றத்தால் கிடைக்கும் பேறு. "தலையே நீ வணங்காய், கண்காள் காண்மின்களோ, செவிகாள் கேண்மின்களோ, மூக்கே நீ முரலாய்" என்று அப்பர் சுவாமிகள் அறைகூவியழைப்பதும் இதைப்பற்றியதே.

காழியர்கோன் ஞானப்பாலுண்ட சில நிமிஷங்களுக்குள் "இனவெள்வளை சோர என் உள்ளங்கவர்கள்வன்" என்றார். வயது முதிர்ந்த அப்பர் "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்......பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்......தன்னை மறந்தாள்......தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே" என்கிறார். "கலைகள் சோர்கின்றதும் கனவளை கழன்றதும் முலைகள் பீர்கொண்டதும் மொழிய

வல்லீர்களே" என்று மெய்ப்பாடு பொருந்தக் கூறுகிறார் நம்பி ஆரூரர். மணிவாசகப் பெருமான் பாவைபாடிய வாயால் கோவை பாடியதும் இந்த மடை மாற்றம் பற்றியதே. ஆழ்வார்கள் திருவாக்கிலும் அகத்துறைப் பாடல்கள் நிரம்ப உள்ளன. இவற்றிற்கு உரை வகுத்த பூர்வாசிரியர்கள், மிகமிகச் சுவைபட இவைகளை விவரிக்கிறார்கள்.

சைவத்தின் தொன்மை, பெருமை அருமைகளைக் கண்டு அழுக்காறு கொள்ளும் ஒரு குழுவினர் சைவம் எனும் சொல் ஆரியச்சொல் ஆதலின், சைவசமயமே தமிழ் மக்களுக்கு ஆரியர்களால் தரப்பெற்றதென்று வாய்கூசாமல் சொல்லுவர். இது உண்மை ஒரு சிறிதும் கலவாத முழுப்பொய். சைவ சமயத்தின் தூய்மையான பழைய தமிழ்ப் பெயர் "திருநெறி" என்பது "திருநெறிய தமிழ்" என்று காழிப் பிள்ளையும், "திருநெறி நடந்ததன்றே" என்று சேக்கிழாரும் கூறுவதை நோக்குக. சிவபெருமான் பெயர்களுள் "திரு" என்பதும் ஒன்று. தேவாரத்தில் பல பாசுரங்களில் இதைக் காணலாம். சிவம் எனும் சொல்லே தமிழ்ச் சொல் என்று எம். எல். பிள்ளை, மறைமலை அடிகள் முதலியோர் நிலை நாட்டினர். "It is likely that the Sanskrit word Siva bears phonetic resemblance to the pre-Aryan name for this God" என்பர் Sir John Marshall. மேலும் இவர் கூறும் உண்மையொன்றையும் காணலாம். அது, ஹிந்து மதம் அடிப்படையாகக் கொள்வன எல்லாம் ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னரே இந்நாட்டில் இருந்தன என்பதே. "Many of the basic features of Hinduism are not traceable to an Indo Aryan source at all. They come into view, not in the earliest Vedic literature, but in the later Vedas, Brahmanas, Upanishads and Epics......when the Vedic Aryans had long since amalgamated with the older races and absorbed some measure of their culture and teachings." இந்நாட்டுப் பழங்குடி மக்கள் கொள்கைகளை ஆரியர்கள் ஏற்றுத் தங்கள் உருத்திரனையே சிவமாக மாற்றிக்கொண்டனர். நுட்ப அறிவுடைய சைவத் தமிழ் மக்கள் இதைக்கண்டு ஏமாறவே யில்லை. குணதத்துவத்தின் வைகிப், பிரகிருதி புவனந்தம்

சங்கரிக்கும் குணிருத்திரனுகவும் பசுவர்க்கத்துப் பிரளயா கலரிற் பக்குவமுடையவனுகவுமே, ஆரியர்களுடைய ஸ்ரீகண்டருத்திரனைக் கொண்டு, அவனால் அறியப்படாத சதுர்ந்தப் பொருளே பரமசிவம் எனக் கொண்டனர். "வரி யாய மலரானும் வையம் தன்னை உரிதாய அளந்தானும் உள்ளுதற்கங் கரியானும் அறியாத கள்ளில் மேயான்" என்று சம்பந்தப் பெருமான் இவ்வுண்மையைக் கூறுகிறார். "மூவராலும் அறியொணு முதலாய ஆநந்த மூர்த்தியான்." என்று திருவாசகமும் இதனையே சுட்டுகின்றது. இத்திரு வாக்குக்களோடு, வேறு பல மேற்கோள்களைக் காட்டி மாதவச் சிவஞான யோகிகள் "சங்காரகாரணனுகிய முதலையே முதலாக உடைத்து" என்பதன் விரிவை மாபாடி யத்துள் விளக்கியுள்ளார்.

பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளுண்மை மிக முக் கியமானது. இம்மூவகைப் பாகுபாடு அறிவுநிலையைக் கொண்டே தோன்றியது. அறிவித்தால் அறிந்து, அறிவிக்கா விடில் அறியாமை செறிந்து நிற்பது உயிர் எனும் பசு. அறிவித்தாலும் அறியாதது ஜடம் ஆகிய பாசம். அறிவிக்கா மலே அறிந்து உயிருக்கு அறிவிக்கும் உதவி செய்வது பதி ஆகிய கடவுள். இம்மூவகைப் பாகுபாட்டின் நுட்பங்கள் பலவற்றை யறியாத ஏகான்மவாதிகள், பொருள் ஒன்றே, அஃதே பிரமம். உயிர் உலகம் முதலியன பொய்த்தோற் றங்கள் என்பர். இக்கொள்கைகளைச் சைவர், வைணவர், மாத்வர் முதலிய பலர் கண்டித்துள்ளனர். பதி, பசு, பாசம் எனும் மூன்றும் அநாதி நித்தியப் பொருள்கள் என்பது சித்தாந்த சைவம்; கடவுள் வியாபகத்திற்கு இது இழுக் கென்பர் ஏகான்மவாதிகள். பதி [1]வியாபகம், பசு [2]வியாப் பியம், பாசம் [3]வியாப்தி என்று இதை மறுப்பர் சித்தாந்தி கள். இத்தகைய சாத்திர பரிபாஷையைப் புரிந்துகொள் ளும் வேட்கையில்லாதவர்கள், சைவம் சிக்கல் இல்லாமல் தெளிவாகச் சுருக்கமான கொள்கைகளையுடைய சமயம் அல்ல என்பர். இவர்களுக்குவாய்ப்பூட்டுப்போல் எழுந்ததே

1. எங்கும் பரவி இருக்கும் தன்மை. நிறைவு, பரப்பு, விரிவு.
2. வியாபிக்கப்படுவது, அடங்கிய நிறைவு.
3. எங்கும் இருக்கை. ஒப்பு நிறைவு.

சிவஞான போதம். வியாஸர் மொழிந்த 555 சூத்திரங்கள் இதிலில்லை. பன்னிரண்டே சூத்திரங்கள், நாற்பதே அடிகள். இவற்றுள் சைவ நுட்பமனைத்தையும் மெய்கண்டார் கூறுகிறார். "Saivism in forty lines of short verse" என்று பரப்பத்தகும் சுருக்கம், வேறு எச்சமயத்திற்கும் இல்லை. தென்முகப் பரமன் இதையே சின்முத்திரையாகக் காட்டுகிறான். "மும்மலம் வேறுபட்டொழிய மொய்த்துயிர் அம்மலர்த்தாள் நிழல் அடங்கும் உண்மையைக் கைமலர்க் காட்சியில்" நல்குகின்றான்.

சமயம் என்றால் என்ன, அதன் குறிக்கோள் யாது, மக்கள் வாழ்க்கையில் அது எவ்வாறு பயன்படுகின்றது, மக்கள் சமூகத்தில் ஏற்படும் மாறுபாடுகளோடு உறவு கொள்ளாமையால் சமயம் எத்தகைய குற்றங்களை அடைகின்றது இன்னபிவற்றை மேலை நாட்டுப் பேரறிஞர்கள் அவ்வப்போது ஆராய்கின்றனர். இம்முறையில் நமது சமயத் தலைவர்கள் சிறிதும் கவனம் செலுத்தாமையால் சைவத்திற்கேற்பட்டுள்ள இடர்கள் பல. சைவத்தைத் தாக்குகின்ற இயக்கங்கள் பலவற்றிற்கு இவர்களுடைய கவனக்குறைவே காரணம். திருக்கோயில் வழிபாட்டில் காணப்படும் பல குறைகள் இவர்களால் நீக்கப்படுதல் வேண்டும். தேவார முதலிகள் மூவர்காலத்தில், நாமே திருக்கோயிலிலுள்ள திருமேனிகளை திருமுழுக்காட்டி, மலர்தூவி வழிபடும் உரிமை பெற்றிருந்தோம். தேவாரப் பாடல்பெற்றதிருக்கோகரணம், திருப்பருப்பதம்(ஸ்ரீசைலம்) ஆகிய இரண்டிலும் இவ்வுரிமை இன்றும் நமக்குண்டு. வடநாட்டுத் தலங்கள் எல்லாவற்றிலும் இவ்வுரிமை நமக்குண்டு. சிவப் பிராமணர்கள் கோயில் பூசகர்களாக ஏற்பட்ட பிறகே இவ்வுரிமையை நாம் இழந்தோம். திருக்கோயிலில் அவரவர்கள் நிற்க வேண்டிய இடப்பிரிவினை, சிவப் பிராமணர்கள் மூலமாக வேற்று மொழியில் அருச்சனை, அவர்கள் ஒழுக்கக் குறைவு முதலிய பற்பல தொல்லைகள் தோன்றின, நிலவுகின்றன, முற்றிலும் அழிந்தில. மீண்டும் பழைய உரிமைகளை நாம் பெறும் வரையில் இவை ஒழிய மாட்டா.

சைவசமயத்தைக் கொள்கைகள் நிரம்பிய ஒரு பெருஞ் சுமை என்று எண்ணுவது பெருந்தவறு. அன்றாட வாழ்க்

கையில் ஊடுருவி நிற்கும் தன்மையது அஃதென்பதை நாம் உணர்தல் வேண்டும். தனது இருக்கைபற்றிய நிலவரங்கள் அவ்விருக்கைக்குப் பொருத்தமானவைகளே என்று உயிர் அவாவுதலும், அறிதலுமே சமயமாகும். இந்த அவாவைப் பூர்த்திசெய்து உயிருக்கு ஆறுதல் அளிப்பதில் சைவ சமயம் சிறந்து விளங்குகிறது. 1. உயிர் முதலும் முடிவும் இன்றி அநாதி நித்தியமாக உள்ளது. 2. நல்வினை, தீவினைகளால் அதற்கு இப்பிறவியில் உடல், கருவி கரணங்கள், கல்வி, செல்வம், குலம் முதலிய சூழ்நிலைகள், இன்ப துன்ப நுகர்ச்சி முதலியன வருகின்றன. 3 இவ்வுடலால் இவ்வுலகில் நடத்தும் சமய வாழ்க்கையைக் கொண்டே உயிர் விளக்கம் பெறலாம். 4. வினைத்தொடரையும் அணுத் தன்மையாகிய சிறுமையையும் ஒழிக்கலாம். 5. இப்பிறவி யிலேயே மும்மலங்களையும் அறுத்து, கடவுளின் அளவற்ற விரிவில் இரண்டறக் கலந்து பேரின்பத்தை அனுபவிக்க லாம். இவ்வாறெல்லாம் புகட்டிச் சைவ சமயம் உயிருக்கு ஆறுதல் அளிப்பது போல வேறு எச்சமயமும் செய்வதில்லை. அன்பு, மானம், தூய்மை, பிறர் நலம் பேணுதல் முதலிய குறிக்கோள்களை நாடும் போது, நமது வாழ்க்கையின் உண்மை நோக்கமும் உட்கருத்தும் நமக்குப் புலனாகின்றன. அண்டப் பேரமைப்பில் நமக்குள்ள இடமும், கடமையும் விளங்குகின்றன. இக்குறிக்கோள்களைத் தங்களுடைய வாழ்க்கையிற் சிறப்பாகக் காட்டிய சைவப்பெரியார்களே அறுபத்துமூன்று நாயன்மார்கள். அவர்கள் ஈர அன்பினர், யாதும் குறைவிலா வீரர், வீடும் வேண்டா விறலினர் என்பனவற்றைச் சேக்கிழார் அழகாகக் கூறுகின்றார். இக் குறிக்கோள்களின் உண்மை நிலையறியாது இடர்ப்பட்ட வர்களே, நல்வினை நீக்கிய வல்வினையாளர், கொடையிலா மனத்தார், உருகு சிந்தையில்லார், கசிவொன்றிலாப்பிட்டர் என்று காழிச் செம்மல் கூறும் வகுப்பினர்.

மக்கள் தாம் கொண்டாடுகிற கடவுளைப்பற்றிய கருத் துக்கள் வாழ்கைப் பெரு நலங்களை எப்போதும் காட்டும் கண்ணாடிகள் போன்றவை. (Men's ideas of God are always faithful mirrors of the things they value most) என்று John Baillie, "The Roots of Religion in the Human Soul" நூலிற் கூறுகின்றார். கடவுளைக்

காட்டும், கண்ணாடியே தமது தேவாரம் என்பர் அப்பர் பெருமான். இப்பேராற்றல் சமய குரவர் நால்வர் திருவாக்கிற்கும் உண்டு. ஆதலால் அவை இன்றும் போற்றப் பெறுகின்றன. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த Dr. G. U. Pope தாம் அதைப் படிக்கும்போது உள்ளம் உருகிக் கண்ணீர்விட்டதைத் தெரிவித்துள்ளார். Sir George Elliot, Dr. Barnett முதலிய பலர், நால்வர் திருவாக்கைப்போல் வேறு எம்மொழியிலும் இல்லையென்று புகழ்கின்றனர். பன்னிரு திருமுறைகளைப் பன்முறை நுட்பமாகப் பயில்வது ஒவ்வொரு சைவரும் செய்வதற்குரிய முதற் கடமையாகும். சிவபூசையின் அங்கமாக மட்டும் திருமுறைப் பாராயணம் செய்வது போதாது. நம்மை மறந்து உண்மையான இன்பம் நுகர்வதற்கு, திருமுறைப் பாடல்களைப் போல் உதவி செய்வன வேறு எவையும் இல்லை. கடவுள் நம்மிடம் நேரில் பேசும் அனுபவம் இன்பம் ஆகிய நலங்களைத் திருமுறைப் பாடல்கள் அளிக்கும். சைவ சமயம் தருகிற செல்வங்களுள் தலையாயது திருமுறைச்செல்வம். தில்லைத் திருச்சிற்றம்பலச் செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம். அதற்கு வழிகாட்டும் திருமுறைச் செல்வம் வாழ்க! வாழ்க!

அறிவியல் ஆராய்ச்சி (Scientific Research) சிறந்து விளங்கும் இக்காலத்தில், அது நாத்திகத்தை வளர்க்கிறதென்று சிலர் கூறுவர். அறிவியலின் உண்மைத் தன்மையை அறியாதவர்களே இப்படிச் சொல்லுவர். மேலைநாட்டு அறிவியல் வல்லுநர் பலர் அறிவியலின் குறுகிய வேலையை விளக்கினர். உலகப்பொருள் ஒவ்வொன்றிலும் அளக்கும் பகுதிகளும், நுகரும் பகுதிகளும் உண்டு. 'கருப்பன்' என்னும் பெயருடைய ஒருவனது உயரம், பருமன், எடை, கழுத்தளவு, கைகால் அளவு, நிறம் முதலிய பல விவரங்களைக் குறிப்பது போன்ற வேலையே அறிவியல் செய்வது. இவைகளால் அவனுடைய தன்மை, அழகு, குணம், ஒழுக்கம், அன்பு நிலை முதலியவற்றை அறிய முடியாது. The deep line of cleavage is between the metrical and the non-metrical aspects of the world என்று Eddington பேரறிஞர் கருதுகின்றார். அறிவியல் ஆராய்ச்சியால் அளக்க முடியாத அழகு, குணம், இன்பம், அன்பு, அருள் என்ப

வற்றின் வடிவாகவே உள்ள கடவுளை இல்லையென்று அறிவியல் எப்படிக் கூறும். Darwin நிலைநாட்டிய Evolution எனும் கூர்தல் முறையால் நாத்திகம் பரவுகின்றது எனச் சிலர் நினைப்பது பெருந்தவறு. Dr. Keens "I believe in God and in Evolution." Noble's Purposive Evolution முதலிய நூல்களைப் பயின்றால் கூர்தல் முறையின் உண்மை நன்கு விளங்கும். Survival of the fittest கொள்கையில், தகுதிப்போரில் வன்மை மிக்கதை அறியலாமே தவிர நன்மை, அழகு, அருமை, இன்பம் மிக்க பொருள்களை யறியமுடியாது. வன்மை மிக்க புல் நன்மை மிக்க நெல்லை ஒழித்துவிடும். களை எடுத்துப் புல்லை எரிந்துவிட்டு நெல்லைப் பாதுகாக்கவேண்டும். கடவுள் உலகுக்கு நிமித்த காரணராய் நின்று, கர்மங்கட்கீடாகக் கருணை மிகுதியால் உயிர்கட்கு உடல் கருவி உலக இன்பங்களைக் கூட்டி வைத்து, மலங்களை முதிர்வித்துப் போக்கிப் பேரின்ப நிலையைத்தருகிறார் என்பது சைவர்கள் கூற்று. இது கூர்தல் முறையால் (Evolution) எவ்விதத்திலும் மறுக்கப் படாததேயாம்.

இந்நூற்றாண்டில் உலகத்தவர் நாகரிகமாக நினைப்பது, பெரும்பொருள் சேகரித்தலும், பெரும் பொருட்செலவில் இன்பத்துறையில் ஈடுபடுதலுமாம். அன்றும், இன்றும், என்றும், தமிழர் நாகரிகத்தின் குறிக்கோள் அன்பே. கடுவன் இளவெயினனார் பரிபாடலில் விண்ணப்பம் செய்தவை "பொன்னும் பொருளும் போகமும் அல்ல, நின்பால் அருளும், அன்பும் அறனும்" ஆகும். "அன்பின் வழியது உயிர்நிலை" "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்பன வள்ளுவர் வாய்மொழி. பலநாள் பிரிந்திருந்த கோவலனைக் கண்ணகி அடைந்தபோது, தனது இளமை அவனது இன்ப நுகர்ச்சியின்றிக் கழிந்தமைக்கு வருந்தவேயில்லை. "அறவோர்க்களித்தலும்.........விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" என்று இல்வாழ்க்கையின் குறிக்கோளை நன்கு விளக்குகிறாள். பூம்பாவை இல்லறம் நடத்துவதற்கு முன்பே இளமையில் இறந்தமையால் இழந்த நலத்தைத் திருஞான சம்பந்தர், பூம்பாவைப் பதிகத்து முதற்பாசுரத்திலேயே "ஒட்டிட்டபண்பின் உருத்திரபல்கணத்தார்க்கு அட்டிட்

டல் காணுதே போதியோ பூம்பாவாய்" என்று குறிக்கிறுர். "மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும், அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்" என்று சேக்கிழார் இதனையே சுட்டுகிறுர். இந்த இறவாத இன்ப அன்பையே காரைக்காலம்மையார் கடவுளிடம் வேண்டியது. "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார், அன்பே சிவமாவதாரு மறிகிலார்" என்பர் திருமூலர்.

இந்த நிலையில் பயில்வோர்க்கு நாளடைவில் "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" எனும் அனுபவம் கைகூடும். இந்த அனுபவ மேலிட்டால் "நினைந்தொறும், காண்தொறும், பேசுந்தொறும், எப்போதும் அனைத்தெலும்பு உள்நெக ஆநந்தத் தேன் சொரியும்." "காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்." உரோம கூபங்களாய்க் கண்ணநீர்கள் துள்ளம் சோர, காலும் எழா, கண்ணநீரும் நில்லா உடல் சோர்ந்து நடுங்கிக் குரல் மேலுமெழா மயிர்க்கூச்சுமறு என்று ஆழ்வார்கள் இத்தகைய நிலையைக் குறித்துள்ளார்கள். "பேசின வாய் தழுதழுப்பக் கண்ணீரின் பெருந்தாரை மாசிலா நீரழித்தங் கருவிதர மயிர்சிலிர்ப்பக் கூசியே உடல்கம்பித் தடுவார்" என்று சேக்கிழார் பெருமான் பத்தராய்ப் பணிவார் நிலையைக் காட்டுகிறுர். இவைகளைத் தொகுத்து, உபதேசகாண்டம், சிவபுண்ணிய மான்மியச் சருக்கம், அரன் அடியார்கள் இலக்கணங்கள் இருபத்து மூன்றினையும் கூறுகின்றது. இந்த உணர்ச்சி நிலையை வளர்ப்பதற்குச் சிறந்த வழி, உணர்ச்சியுடையார் கூட்டுறவேயாம். "சிவபக்தர்மாட்டு அன்புடையராய், மனம் சொற் செய்கைகளான் அவர்வழி நிற்பார்க்கு உலகியல் அறிவு மாறிச் சிவாநுபூதியுணர்வே மேம்பட்டு நிகழும். அது நிகழவே, பௌதிக உடம்பைப்பற்றி வரும் பிராரத்த வினைகள், அவர்க்கு நுகர்ச்சியாதல் செல்லாமையின் வாதிக்கமாட்டா" என்று சிவஞான சுவாமிகள் அடியார் இணக்கத்தின் சிறந்த பயனைக் கூறுகிறுர். அப்பர், சம்பந்தர் முதலியோர் கூடிய "கூட்டத்தினுல் உளதாய்த்திக் குவலயமே' என்றுர் நம்பியாண்டார் நம்பிகள். எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு", "அன்பர் பணிசெய்ய ஆளாக்கிவிட்டு விட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும்

பராபரமே" என்ற பொன்மொழிகள் நமக்கு என்றும் நல்வழி காட்டும்.

இவ்வாறு பற்பல வழிகளில் உயர்ந்த நமது சமயத்தைப் பாதுகாத்து வளர்ப்பது, சைவ நன்மக்கள், சைவ சபைகள், சைவ மடங்கள், சைவ ஆலயங்கள், சைவத்துறவிகள் முதலியோர் கடமையாகும். சைவப் பெண்மணிகள் இந்தப் பெருந்தொண்டில் பெரும்பங்கு பெற்றுள்ளனர். அவர்களாலேயே, பற்பல இல்லங்களில் சைவ ஒழுக்கம் பாதுகாக்கப்படுகிறது. குழந்தைகளைச் சைவ ஒழுக்கத்திற் பழக்கும் பெரும் பொறுப்பு அவர்களுடையது. சமய வளர்ச்சித்துறையில் ஏனைய சமயத்தவர், சிறப்பாகக் கிறிஸ்தவர் செய்கிற தொண்டுமுறைகளைச் சைவ சமயத்தில் உள்ள ஆண்களும், பெண்களும் கைக்கொள்ளுதல் நலம். இவற்றோடு திலகவதியார், மங்கையர்க்கரசியார் முதலிய பெண் அடியார்கள் செய்த தொண்டு முறைகளை நமது சைவப் பெண்மணிகள் பின்பற்றவேண்டும். தம்பியாரைச் சைவராக்கிய பெருமை திலகவதியாருக்கு உண்டு. கணவனையும், பாண்டி நாட்டையும் சைவமாக்கிய பெருமை மங்கையர்க்குத் தனியரசியாம் நம் தெய்வத்திற்கு உண்டு. சிறுத்தொண்டர் வல்வினையிற் சிறந்த வெற்றிபெற, அவர் வாழ்க்கைத்துணைவியார் திருவெண்காட்டு நங்கையாரின் ஒத்துழைப்பே உதவிசெய்தது. இல்லறம் நடத்திய ஒவ்வொரு நாயனர் வாழ்க்கையிலும் அவருடைய மனைவியின் ஒத்துழைப்பே வெற்றிக்கு வழிகாட்டிற்று.

சைவம் பரப்ப நமது சமயகுரவர் காட்டிய வழிகள் சாலச் சிறப்புடையன. சைவம் பரப்பவே தமது பெற்றோர்களும், நமது தமிழ்நாடும் செய்த தவத்தின் பயனாகத் திருஅவதாரம்செய்தவர் திருஞானசம்பந்தர். இவருடைய இளமையும் வனப்பும் இசையும் தமிழும் எல்லோரையும் இழுத்தன. இவர் சென்ற இடமெல்லாம் திருநீற்றுத்தொண்டர் குழாம் பல்லாயிரக்கணக்கில் உடன் சென்றது. வயது முதிர்ந்த அப்பரே, இவரைக்காணச் சீகாழி சென்றார். சைவ சமய வளர்ச்சி, திருக்கோயில் வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டது என்பது இவர் கருத்து. ஊர், நகர வேறுபாடின்றிச் சிவாலயங்கள் உள்ள தலங்கட்கெல்லாம் செல்வார். தலத்தின் இயற்கை அழகை இறைவன்

திருவருள் விலாசமாகவே போற்றுவார். Wordsworth, Walt Whitman முதலிய பெரிய கவிகளும் இயற்கை யின்பப்பாடலில் இவருக்குப் பிற்பட்டவர்களே. அழகின் உறைவிடம் எல்லாம் Truth Beauty and Goodness ஆகி யன இறைவன் உண்மை, அழகு நன்மை வடிவாயிருப்பதை நினைவூட்டும் என்பதே இவர் கருத்து. இதை அறிவிக்கும் முறையிலேயே இவர் பாடல்கள் அமைந்திருக்கும். அங்கம் பூம்பாவையின் பேரழகைத் தமது பதினாறும் வயதில் இவர் அனுபவித்ததைச் சேக்கிழார் "கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிரம் முகத்தாற் கண்டார்" எனப் புகழ் கின்றார். தலங்கள் தோறும் நடக்கும் விழாக்களின் சிறப்பை விரித்துரைப்பார். ஐம்புலன்களின் மடைமாற்றத் திற்குத் திருவிழாக்கள் துணை புரிதலை இவர் நன்கு அறிந்தவர். தவத்தின் மிக்காரும் விழாக்களைத் துய்த்துப் பயன்பெற் றதை "ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள் துய்ப்பனவும் காணாதே போதியோ பூம்பாவாய்" என்று கூறுகிறார்.

தமிழ்ப் புலமை மிகுதியால் மட்டும் இவர் பாடினார் என்று கனவிலும் நாம் எண்ணுதல் கூடாது. இவர் பாடல் கள் எல்லாம் உணர்ச்சி மேலீட்டால் எழுந்தனவே. "சிராப்பள்ளிக் குன்றுடையானைக் கூற என்னுள்ளம் குளிரும்மே" என்ற அருமையான திருவாக்கில் கூற எனும் எச்சம், எதுப்பொருட்டும், பயன் பொருட்டும் நிற்றலை இலக்கணப் புலவர்கள் சுவைப்பர். கூறுவதற்குக் குளிரும், கூறுவதால் குளிரும் என்று இரண்டு பொருளையும் தருதல் காண்க. "உளங்குளிர்ந்த போதெலாம் உகந்து உகந்து உரைப்பனே" என்பதில் இவருடைய உளக்குளிர்ச்சி உகப் பைத் தந்து பாடவும் செய்கிறது என்பதைக் காணலாம். பற்பல அல்லல் வட்டங்களிற் சுழன்று வெதும்பிய நமது உள்ளமும், இவருடைய பாடல்களைப் பயின்றால் உள்ளக் குளிர்ச்சியடையும் என்பதை இன்றைக்கும் அவரவர் அனுபவத்தில் காணலாம். சிவாலய தரிசனத்தில் இவ ருடைய உணர்ச்சி மேலீட்டைச் சேக்கிழார் "உருகிய அன்புறு காதல் உள்உருகி நனை ஈரம் பெற்றாற்போல், மருவு திருமேனியெலாம் முகிழ்த்து எழுந்த மயிர்ப் புளகம் வளர்க்கு நீராய், அருவி சொரி திருநயனத்து ஆனந்த வெள்ளம் இழிந்தலைய நின்று" முதலிய பல சொற்றொடர்

களால் காட்டுகிறார். இவ்வாறே அப்பரும் சுந்தரரும் மிக உருகிப் பாடியதைப் பெரிய புராணத்துட் பல இடங்களிற் காணலாம்.

சிவாலய வணக்கம், தேவாரப் பாடல்களை அருளிச் செய்தல் என்பனவற்றோடு மட்டும் சமயகுரவர்கள் திருப்பணி நின்றுவிடவில்லை. உயிர்கள் படும் துன்பத்துக்கு இரங்கி இவர்கள் செய்த தொண்டுகள் அளவற்றவை. முயலகன் நோய் தீர்த்தல், பாண்டியன் வெப்பு நோய் தீர்த்தல், அடியார் குழாம் குளிர்க் காய்ச்சல் கொள்ளை நோய் தீர்த்தல், விஷம் தீர்த்தல், பஞ்சப்பிணி, பசிப்பிணி தீர்த்தல் முதலியன சம்பந்தர் தொண்டுகளாம். விஷம் தீர்த்தல், பஞ்சப்பிணி பசிப்பிணி தீர்த்தல், திருவுழவாரத் தொண்டு முதலியன அப்பர் செய்தன. முதலையுண்ட பாலனை அழைத்தல் முதலியன சுந்தரர் செய்தன. இத் தொண்டுகளின் வரலாற்றைப் பார்க்கும்போது இவர்களுடைய பேரிரக்கமும், தொண்டு மனப்பான்மையும் நன்கு விளங்கும். சமயகுரவர்கள் முறையைப் பின்பற்றி நாமும் ஒல்லும் வகையெல்லாம் தொண்டு செய்தல் வேண்டும். தொண்டு செய்வதில், பொறுமையும், நிறமையும், அன்பும், பயிற்சியும் நிரம்பவேண்டும். இல்லாவிடில் தொண்டின் பெயரால், தீமையும், பூசலும், பொய்யும் களவும் பெருகும். இன்று Community-Projects, National Extension Service முதலிய பல அமைப்புகள் தொண்டர்கட்குப் பயிற்சி தருகின்றன. சம்பந்தர் காலத்தில், கணநாத நாயனார் தொண்டர்கட்குப் பல துறைகளில் பயிற்சி தந்ததை, பெரிய புராணம் விரிவாகக் கூறுகின்றது. "தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே" என்றும், "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்றும், அப்பர் உபதேசிப்பதை ஓர்க. சிவபெருமானே அப்பர் கைத்தொண்டிற்கு மகிழ்ந்தான். "கைத்தொண்டின் படிமையினல் வாசியிலாக் காசு பெற்றார் வாகீசர்" என்று சேக்கிழார் இதைக் குறிக்கிறார். நமது ஆணவத்தைப் போக்குதற்குத் தொண்டு மிகச்சிறந்த உபாயமாகும்.

தொண்டின் பெருமையை நாம் நன்கறியச் சிவபெருமானே பல சந்தர்ப்பங்களில் தொண்டனாகத் திருவிளையாடல் புரிந்தான். பிட்டுக்கு மண் சுமந்தான், பிரம்படி

பட்டான், தண்ணீர்ப் பந்தல் வைத்தான், பிச்சையெடுத்துச் சோறுபோட்டான், கட்டமுது தந்தான், விறகு சுமந்து யாழ்பயில் பாண பத்திரனுக்கு உதவினன், நள்ளிரவில் இருமுறை பரவை மனைக்குத் தூது சென்றான். Cold war, War of Nerves என்று இப்போது கூறப்படுகிற போராட்டத்தைப் போல், மதுரை யண்ணலே முதன் முதலாக ஒரு நரம்புப் போரை நடத்தினன். யாழ் வித்வானை வந்த எமநாதனை வெல்லாமலே மருட்டிவிட்ட பெருமை ஆலவாய்ச் சொக்கலிங்கத்தைச் சாரும்.

இறுதியாக, இங்குள்ள இளைஞரும் முதியோரும், செல்வரும் வறிஞரும், கற்றோரும் மற்றோரும், ஆடவரும் பெண்டிரும், நாடோறும் உண்மையான சைவ சமய வாழ்க்கை நடத்துவதற்குப் பொருட் செலவின்றிச் செய்யக்கூடிய சிலவற்றைத் தொகுத்துக் கூறவிரும்புகிறேன். 1. காலையில் எழுந்தவுடன் கடவுளை ஒரு நிமிஷமாவது நினைத்தல். 2. நமது உடல், உடை, வீடு முதலியவற்றை இயன்ற அளவு தூய்மையாக வைத்தல். 3. பொய் சொல்வதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டு பொய்யே பேசாத நிலையடைதல். 4. நமது செயல்களில் களவு, வஞ்சனை, ஏமாற்றம் முதலியவற்றை அறவே ஒழித்தல். 5. நம்மைப்போலவே மற்றவரையும் எண்ணி, அவர்கட்கு வீணான துன்பம் தராதிருத்தல். 6. வீண்சொல், கடுஞ்சொல், பழிச்சொல் முதலியவற்றைப் பேசாதிருத்தல். 7. நம்மைப் பிறர் குறைகூறும்போதும், பழிக்கும்போதும் பேச்சை வளரவிடாது கூடிய வரையில் அமைதியாயிருத்தல். 8. பிறரிடத்தில் கூடிய அளவு இரக்கத்தோடு நடத்தல். 9. பிறருக்குக் கூடிய அளவு உதவி செய்தல். 10. பிறரிடமிருந்து கூடிய வரையில் உதவி பெறாதிருத்தல். 11. நமது வீட்டிலுள்ள தாய், தந்தை, உடன் பிறந்தோர், மனைவி, மக்கள் முதலிய உறவினருடன் கூடிய வரையில் அன்போடு பழகுதல். 12. அவர்கள் நாடோறும் செய்யக்கூடிய சிறு குற்றங்களைப் பொறுத்தல். 13. பெருங்குற்றங்களை எடுத்துக்காட்டி அன்பு செலுத்தி அவர்கள் நாணும்படி செய்தல். 14. கூடிய வரையில் நயமான இனிய சொற்களையே உபயோகித்தல். 15. குழந்தைகளிடம் குழந்தைபோலவே அன்போடு பழகிச் சிறு சிறு கதைகள் மூலம் சமய உணர்ச்சியை ஊட்டு

தல். 16. பன்னிரு திருமுறைகளிலுள்ள பாடல்களில் சில வற்றையேனும் மனப்பாடம் செய்து குழந்தைகட்கும் சொல்லிவைத்தல். 17. வாரத்திற்கொரு முறையாவது, இயன்றால் நாடோறுமாவது மனைவி மக்கள் முதலியவர் களோடு திருக்கோயில் சென்று வழிபடுதல். 18. சைவ சபை ஒன்றின் சார்புபெற்று, ஏதேனும் ஒரு நல்ல நூலை அழுத்தம் திருத்தம், நுட்பம் செறிந்த முறையில் ஊன்றிப் படித்தல். 19. கூடிய வரையில் சைவப் பெரியார்கள் நிகழ்த்தும் சொற்பொழிவுகளைக் கேட்டு அவர்கள் கூறும் செம்பொருள்களை முறையாகக் குறித்து வைத்தல். 20. பன்னிரு திருமுறைப் பாடல்கள் சிலவற்றையேனும் வாயா ரப் பன்னி இயலும் இசையோடு உள்ளம் உருகப் பாடிப் பழகுதல். 21. ஓய்வுள்ள நேரத்தை வீணாகக் கழிக்காமல், நல்ல புத்தகங்கள் படித்தல், நல்லவர்களுடன் பழகுதல் முதலிய நல்வழிகளில் பயன்படுத்துதல். 22. அறிவும் அனுபவமும் முதிர முதிர நம்மாலியன்ற அறிவுத் தொண்டு, அன்புத் தொண்டு, சமயத்தொண்டுகளைச் செய்தல். 23. மேடைகள் மீதேறிப் பேசுவதில் விருப்பத்தைக் குறைத்துக் கூடிய வரையில் ஆராய்ச்சிப் பொருள்களைத் தொகுத்து வெளியிடுதல். 24. சமயத்திற்கும் தமிழ் மொழிக்கும் நம்மா லியன்ற திருத்தொண்டு புரிதல். மேலும் பற்பலவற்றை இவைகளின் விரிவாக வைத்துக் கூறலாம். இவைகளையெல் லாம் நிறைவேற்றுதற்குக் கடவுள் துணைபுரிவாராக.

சிவஞானபோதத் தெளிபொருட் சுருக்கம்

பேராசிரியர் - பாரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியார்,

(முற்றொடர்ச்சி: மலர் - 29; இதழ் - 5; பக்கம் - 266)

இங்ஙனம், இறைவன் ஒன்றுதல் - வேறுதல் - உடனு தல் என்னும் மூன்று வகையுமாய் உயிர்களோடு கலந்து நிற்கின்றான் என்னும் உண்மையை நிறுவுதற்கு, உரை யளவைச் சான்றாக விளங்குவது வேதத்துட் போதரும் “ அத்துவிதம் ” என்னும் சொல்லேயாகும். ‘அத்துவிதம்’ என்னும் இச்சொல்லானது, கேவலாத்துவிதம் விசிட்டாத்து விதம் சுத்தாத்துவிதம் என்னும் சொற்றொடர்களில்

சேர்த்துச் செய்யுள் வழக்கினும் உலக வழக்கினும் பெருகு எடுத்தாளப்பட்டு வழங்கிவருகின்றது. தத்துவ நூல் ஆராய்ச்சிகளில் தலைப்படுவார்க்கு 'அத்துவிதம்' என்னும் சொற்பொருள் பற்றிய ஆராய்ச்சி இன்றியமையாததொன்றாய்த் திகழ்கின்றது. சொல்லாராயும் நெறியாற் கருதிய வழியும் 'அத்துவிதம்' என்னும் சொல், ஒன்றும் இரண்டும் அற்ற கலப்புத் தன்மையை விளக்கவந்ததே யாதல் காணலாம்.

"நத்விதீயம்" என்னும் வடமொழிச் சொல்லின் முன்னின்ற "ந" என்னும் உபசர்க்கத்தில், "ந்" என்னும் மெய்யெழுத்துப் போக, அம்மெய்யின்மேல் ஏறிநின்ற 'அ' என்னும் உயிரெழுத்து மாத்திரம் நின்று "அத்விதீயம்" என்றாகிச் செந்தமிழ் வழக்கில் 'அந்துவிதம்' என்று திரிபெய்திவரும். இவ்வத்துவிதம் என்னும் சொல்லின் முன்னின்ற அகரமானது, அன்மை இன்மை மறுதலை என்னும் மூவகைப் பொருள்களை யுணர்த்தும். அப்பிராமணன் என்றபோது பிராமணன் அல்லாதவன் என்றே பொருள்படும்; ஏனைக் குலத்தாரைக் குறியாது. பிராமணனாக இருந்தும் பிராமணத் தன்மை இல்லாமையைக் குறித்தலால் இந்த அகரம் அன்மைப் பொருளில் வந்தது. அமலம் என்றபோது மலம் இல்லை எனக் குறித்தலால் அங்கே அகரம் இன்மைப் பொருள் குறித்தது. அநீதி என்னும் சொல்லில் நீதியின் மறுதலையைக் குறித்தலால், அகரம் அங்கு மறுதலைப் பொருளை யுணர்த்தியது. இங்ஙனம் இவ்வகரம் அன்மை - இன்மை - மறுதலை என்னும் மூவகைப் பொருள்களையும் உணர்த்துதல், எண்ணுப் பெயர் ஒழிந்த ஏனைய இடங்களிலேயே யன்றி எண்ணுப் பெயர்மேல் வருமிடத்தன்றாம். எண்ணுப் பெயர்மேல் வருங்கால், இவ்வகரம் அன்மைப் பொருள் ஒன்றையன்றி வேறு பிறிது பொருள் எதுவும் பயவாது. எண்ணுப் பெயர்மேல் வர நேர்வுழியும், ஏகம் துவிதம் என்னும் இரண்டு எண்ணுப் பெயர்களின்மேல் மட்டும் வருவதன்றி, ஏனைய எண்ணுப் பெயர்களின்மேல் இவ்வகரம் வருதல் இல்லை. ஏகம் என்னும் சொல்லோடு சேர்ந்து அநேகம் என வருகின்றபொழுது, இஃது 'ஒன்றல்லாதது' என்னும் அன்மைப் பொருளே உடையதாதலை யாவரும் இனிதுணர்வர். இங்ஙனமே துவிதம்

என்னும் சொல்லோடு சேர்ந்து 'அத்துவிதம்' என வருகின்றபொழுதும், இஃது "இரண்டு அல்லாதது" என்னும் அன்மைப் பொருளையே உணர்த்தி நிற்கும் என்பது தெளியப்படும். "என்னும் பெயர்மேல் வந்த நகரம் அன்மைப் பொருள் மாத்திரையே யுணர்த்திப் போதுமையின் நிற்பதன்றி, ஏனைய சொற்களின்மேல் வந்த நகரம்போல, இன்மை - மறுதலைப் பொருள்களை உணர்த்துதல் வழக்கின்கண் இல்லை" எனவரும் ஆசிரியர் மாதவச் சிவஞானமுனிவர் கூற்று இவ்வுண்மையினையே செவ்விதின் அறிவுறுக்கும்.

"அத்விதீயம் பிரமம்" என்றவிடத்துக் கடவுள் ஒன்றே எனப் பொருள் கொள்வார்க்கு "ஏகமேவாத்விதீயம் பிரமம்" என்றவிடத்து எவ்வாறு அப்பொருள் கொள்ளல் இயலும்? அவ்வாறு கூறியது, அப்பொருளை மேலும் மேலும் வற்புறுத்துக் கூறிய அடுக்கேயாம் எனின், அஃது ஏகம் ஏகம் என்றாதல், அத்விதீயம் அத்விதீயம் என்றாதல் இருத்தல் வேண்டுமேயல்லாது, இருவேறு மொழிகளாக இருத்தல் பொருந்தாது. இதனால், "கடவுட் பொருள் ஒன்றே; அஃது எல்லா உயிர்களோடும் கலந்து நிற்கும்" என்பதே, "அத்விதீயம் பிரமம்" என்பதன் உண்மைப் பொருளாதல் விளங்கும். இதனையே "அத்துவிதம் என்ற சொல்லானே ஏகம் என்னின், ஏகம் என்று சுட்டுவது உண்மையின், அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்துமாயிட்டு" எனவரும் ஆசிரியர் மெய்கண்டாரின் திருமொழி தெளிவித்துணர்த்துகின்றது.

"ஆணவத்தோ டத்துவிதம் ஆனபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்துவிதம் சாரும்நாள் எந்நாளோ?"

என்னும் நம் தாயுமானவ அடிகள் திருவாக்கும், நாம் பாசத்துடன் கலந்து அதன் வயமாய் நிற்றல்போல, இறைமுதற் பொருளோடு கலந்து அதன் வயமாய் நிற்கும்நாள் எந்நாளோ எனப் பொருள் பயந்து, அத்துவிதம் என்னும் சொற்குப் பொருள், இரண்டல்லாத கலப்புத் தன்மையே என்பதனை வலியுறுத்தப் போதிய சான்றும். இவ்வாறு ஆசிரியர் மெய்கண்டார் விளக்கும் அத்துவிதமானது, ஏனையோர் கூறும் அத்துவிதம் போலக் கேவலம் என்றாதல், விசிட்டம் என்றாதல், மறுதலை என்றாதல் யாதானும் ஒன்றான் விசேடிக்கப்பட்டு நின்று பொருளுணர்த்தாமல், சுத்த

மாய் நின்றே பொருளுணர்த்துதலால் சுத்தாத்துவிதம் என வழங்கப்படும். இம் முறைமையினை "விசிட்டசத்தை" "சுத்தசத்தை" எனத் தருக்கநூலார் கூறும் வாய்பாடு கள் பற்றியும் உணரலாம். ஏனையோர்கள் கூறும் அத்து விதமானது, கேவலம் விசிட்டம் என்னும் சொற்களால் விசேடிக்கப்படாத வழி, அவர்கள் கூறும் பொருள் தரு தற்கு ஏலாமையின், அவை யெல்லாம் சுத்தாத்துவிதம் ஆகாமையும் காண்க!

இதுகாறும் கூறிவந்தவாற்றால், இறைவன் உயிர்களின் வேற்றுமையின்றி நின்று உயிர்களின் பொருட்டே ஐந் தொழில் செய்வன் என்பது வலியுறுத்தப்பட்டது. உயிர்க ளின்பொருட்டே இறைவன் ஐந்தொழில் செய்வன் எனின், சிலரை வாழ்வித்தும் சிலரைத் தாழ்வித்தும் இறைவன் ஐந் தொழில் செய்தல் எற்றுக்கு? என ஐயம் நிகழும். உயிர் களான் முற்பிறவிகளின் ஈட்டப்பட்டுக் கிடந்த இருவினை களுக்கு ஏற்பவே இறைவன் உயிர்களைப் படைத்தலின், இறைவனை எல்லா உயிர்களையும் ஒப்ப நோக்காமையும் அரு ளின்மையும் உடையன் என்றல் பொருந்தாது. இக்கருத் தினையே "இருவினையிற் போக்குவரவு புரிய" என்னும் சூத் திரத்தொடர் விளக்குகின்றது. இருவினைகளுக்கு ஏற்பவே உயிர்களை இறைவன் படைப்பன் எனின், இருவினைக்கு முதன்மையன்றி அவற்றின் வழி நின்று உயிர்களைப் படைத்து ஐந்தொழில் செய்யும் இறைவனுக்கு முதன்மை யில்லைபோலும் என ஐயம் நிகழும். அதனை நீக்குதற்கே "ஆணையின்" என்பதனை ஆசிரியர் சிங்கநோக்காய் அருளிச் செய்தார். இருவினைகள் முதல்வன் ஆணையான் வருவன வன்றித் தாமே வரும் சுதந்திரம் உடையன வன்மையின், இருவினைகளுக்கு ஏற்ப உயிர்களைப் படைத்தலால் இறைவ னுக்கு நேரும் இழுக்கு ஏதும் இல்லை என்பது.

அற்றேல், வினையுண்டு எனக் கொள்ளின் அதுவே யமையும், இறைவன் வேண்டா; இறைவனுண்டு எனக் கொள்ளின் அவனே அமையும், வினை வேண்டா; இறைவ னும் வினையுமாகிய இருபொருளும் கோடல் மிகையாகும் எனச் சிலர் கருதுவர். அது பொருந்தாது. உலகத்து வேந்தரெல்லாம் தம் நாட்டின்கண் அறநெறியின் வழுவி னுரை வழக்கு வினவி ஒப்பநாடி அத்தக ஒறுத்தற்குப் பாடி

காவலன் மாட்டுத் தம் ஆணையை வைத்து, அவனைக் கொண்டு அத்தொழில் செய்வித்தலே யன்றித் தாமே முன் னின்று அத்தொழில் செய்யார்; அதுபோல இறைவனும் தன் ஆணையை இருவினையின் மாட்டு வைத்து அவற்றைக் கொண்டு உயிர்களுக்குப் பயன் நுகர்விப்பன். எனவே, இறைவனும் வினையும் ஆகிய இருபொருள் கோடல் மிகை யன்று. இதனை விளக்குதற்கே "ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவலிட்டாங்கு அவை அவனது ஆக்கினை யாகலான்" என ஆசிரியர் அருளிச் செய்தார். வினைதானே உயிர்களுக்குப் பயனாக வர அமையும், ஆணை வேண்டுவதில்லை எனச் சிலர் கூறுவர். செய்யும் உழவுதொழிலுக்குத் தக்க பயனை விளை நிலம் விளைவிப்பதன்றி, அத்தொழில் தானே விளைவிக்க மாட்டாது; அதுபோல வினைக்குத் தக்க பயனை இறைவன் ஆணையே உயிர்கட்கு நுகர்விப்பதன்றி, வினைதானே நுகர் வித்தல் இயலாது. இதனையே "செய்பவர் செய்திப் பயன் விளக்கும் செய்யேபோல், வள்ளல் அவன் செய்வன்; செயல் அணையா சென்று!" என்று ஆசிரியர் விளக்கியருளினர்.

> "செய்வினையும் செய்வானும் அதன்பயனும் கொடுப்பானும்
> மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே,
> இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லைஎன
> உய்வகையாற் பொருள்சிவன்என் றருளாலே உணர்ந்தறிந்தார்!"

எனவரும் சேக்கிழார் அடிகளின் பெரியபுராணத் திருப்பாட் டும் ஈண்டுப் பெரிதும் கருதி யுணர்தற் குரியது. அற்றேல், வினைசடமாகலின் உயிர்களைச் சென்றணைந்து பயன்தர மாட்டாதாயினும், உயிர்கள் அறிவுடைய சேதனப் பொரு ளாகலின், அவைகள் தாமே வினைப்பயனை அறிந்து எடுத் துக்கொண்டு நுகரவல்லனவாம். ஆணை எற்றுக்கு? என்று சிலர் வினு நிகழ்த்துவர். காந்தமானது இரும்பினை வலித்துக் கொள்ளும் ஆற்றலுடையதே யாயினும், அதனை ஒருவன் எடுத்துத் தனக்கு நேரொக்கப் பிடித்தவழி யன்றி வலித் துக்கொள்ளமாட்டாது; அதுபோலத் தமக்கென அறிவில் லாத உயிர்களும் இறைவன் நுகர்வித்தவழி யன்றித் தாமே வினைப்பயன்களை அறிந்து எடுத்துக்கொண்டு நுகரவல்லன வல்ல. இக்கருத்தே "காந்த பாசம் போல் அவ்வினையைப் பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல் ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு" என ஆசிரியரால் விளக்கப்பட்டது. எனவே,

இறைவனே ஆணையின் நீக்கமின்றி நின்று உயிர்களுக்கு வினைப்பயனை நுகர்விப்பான் என்பது துணியப்படும்.

அங்ஙனமாயின், இருவினையுண்மைதான் எதனுற் பெறுதும் எனின் - உயிர்களுக்கு இன்பதுன்ப நுகர்ச்சியுண்மையின், அதற்குக் காரணமாய இருவினையுண்மை பெறுதும் என்பது. மேலும், காரியங்க ளெல்லாம் ஒருங்கே தோன்ருது அடைவே தோன்றுதற்குக் காரணம் வினையேயன்றிப் பிறிதொன்றின்மையானும் வினையுண்மை துணியப்படும். அன்றியும், வினையில்லையாயின் விதித்தன செய்து விலக்கியன ஒழிதலாற் பயனின்ருய் முடியுமாகலானும், வினையுண்மை பெறப்படும். இன்னும் இதன்கட் படும் வினவிடைக ளெல்லாம் சிவஞானசித்தியாரின் கண் "இருவினை இன்பத் துன்பத்து" என்னும் திருவிருத்தம் முதலாக விரித்தோதப் படுதலின் ஆண்டுக் கண்டுகொள்க. அற்றேல், வினையுண்மை துணியப்படுமாயினும், அவ்வினையை ஆதி என்பதோ? அநாதி என்பதோ? ஆதியெனின், முன்பில்லாதது இடையே தோன்றும் என்றல் சற்காரிய வாதத்துக்கு எலாது; அநாதியெனின், ஒருவர் கூட்டவேண்டுவதில்லை எனச் சிலர் தடை கிளத்துவர். நெல்லும் செம்பும் உண்டாயின அன்றே அவற்றில் உமியும் களிம்பும் உடன்தோன்றி உளவாயின வன்றி, இடையே வந்தன வல்ல; அதுபோல உயிர்கள் உளவாயின அன்றே, மலமாயை கன்மங்களும் அவற்ருேடு உடன்தோன்றி உளவாயின, இடையே வந்தன வல்ல. முன்னரே உள்ளதாய தாமரைப் பூக்களில் ஒன்று அரும்பாக நிற்கவும், பிறிதொன்று மலர்ந்து விளங்கவும், வேருென்று வதங்கி யொழியவும் அவ்வவற்றின் நிலைக்கேற்ப ஞாயிற்றினுற் செய்யப்படுமாறு போல - உயிர்களின்பால் முன்னரே யுள்ள மலமாயை கன்மங்களுக்கு ஏற்ப இறைவன் உயிர்களைப் படைத்துச் செயற்படுத்தி நிற்பான். எனவே, வினை அநாதியாயின் ஒருவர் கூட்ட வேண்டுவதில்லை என்றல் பொருந்தாது.

"நெல்லிற் குமியும், நிகழ்செம் பினிற்களிம்பும்
சொல்லிற் புதிதன்று : தொன்மையே !—வல்லி,
மல, கன்மம் அன்றுளவாம்! வள்ளலாற், பொன்வாள்
அலர்சோகம் செய்கமலத் தாம் !"

என்னும் வெண்பாவினுல், இக்கருத்தினையே ஆசிரியர் நன்

கினிது விளக்கியருளினர். எனவே, உயிர்கள் முற்பிறவி களிற் செய்த வினையே இறைவனாணையினல் இப்பிறவியின் கண் உயிர்களுக்குப் பயனாக வரும் என்பது தெளிவாம்.

அற்றேல், மீளப் பிறத்தல் சடத்துக்கன்றிச் சித்துக்கும் உளதாயி னன்றே, முற்செய்வினையே இப்பிறவியிற் பயனாக வரும் என்றல் அமையும்? "குடம் உடைந்தவழிக் குடா காயம் ஆகாயத்தோடு கூடுமாறுபோல, உடம்பு நீங்கிய வழி உயிர் பிரமத்தோடும் கூடும்; இறந்த உயிர் மீளப் பிறப்பதில்லை" எனச் சிலர் கூறுவரே எனின் - தோற்றமும் கேடும் தொடர்ச்சியாய் உள்ள பொருள் களுக்கே யன்றித், தோற்றமும் கேடும் எய்துதற்குரிய உரிமையில்லாத ஏனைய பொருள்களுக்குத் தோற்றம் நிகழ் தல் கூடாமையின், இறந்த உயிர்கள் மீளப் பிறக்கும் என்று துணியலாம். இறந்த உயிரே மீளப் பிறக்குமாயின், முற்பிறவியின்கண் நிகழ்ந்தன வெல்லாம் இப்பிறவியின்கண் அறிதல் வேண்டுமே எனின் - நனவிற் கண்டதனைக் கன விலும், கனவிற் கண்டதனை நனவிலும் இவ்வொரு பிறவி யின்கண்ணேயே நாம் மறந்தொழிந்து மயங்கி வருதலை அனுபவத்திற் கண்டு வருகின்றேமாகலின், முற்பிறவியின் நிகழ்ச்சிகளை இப்பிறவியின்கண் அறியாமைபற்றி, இறந்த உயிர் மீளப் பிறவாது என்றல் அமையாது. குடாகாய உவமை மட்டுமேயன்றி, அரவுதன் தோலுரிவு முதலிய உவமைகளும் நூல்களிற் கூறப்பட்டுள்ளன. இவ்விரு வேறு உவமைகளும் ஒன்றற்கே யுவமையாதல் கூடாமையின், அரவுதன் தோலுரிவு உயிர்தூலவுடம்பை விட்டுப் போமாற் றிற்கும், குடாகாய உவமை உயிர் சூக்குமவுடம்பைவிட்டுப் போமாற்றிற்கும் கூறப்பட்டன என்று அறிந்துகொள்ளு தல் வேண்டும். எனவே, இறந்த உயிர் மீளப் பிறக்கும் என்பது தேற்றம்.

அங்ஙனமாயின், சடப் பிரபஞ்சம் போலச் சேதனப் பிரபஞ்சமாகிய உயிர்களும் மீளப் பிறத்தற்கு ஏதுவாய் இருவினைகளைச் செலுத்தி நிற்கும் ஆணை எனப்படும் சத்தி யானது, இறைவனின் வேறோ? ஒன்றோ? என ஐயம் நிகழ்தல் இயல்பு. அதனைக் களைதற்கே,

"எங்குமுளன் என்றளவை, ஒன்றன்று; இரண்டென்னில்,
எங்கும் உளன் அன்று; எவற்றெவனும்—அங்கண்

அவை, அவன் அன்றில்லை; பொன், ஒளிபோல் ஈசன்;
அவை, உடைமை; ஆளாம், நாம் அங்கு!”

என்னும் இனிய வெண்பா எழுந்தது! இறைவன் எங்குமுளன் என்பதனால், அவன் ஒருபொருளாதல் கூடாது; ஏனெனில், கங்கைக் கரையில் நின்ற ஒரு மனிதனே காவிரிக் கரையினும் ஒருங்கு நிற்க மாட்டான். அதுபோல இறைவன் ஒருபொருளேயாயின் ஒருகாலத்து ஓரிடத்து உளனாதலன்றி யாங்கணும் விரவி நிற்க மாட்டான்! இறைவன் இருபொருளாய் நிற்பான் எனின், அவன் யாங்கணும் விரவி நிற்றல் இயலாது; ஏனெனில், தன்மாட்டே வேற்றுமை யுடையானுக்குப் பிறபொருள்களின்பால் வேற்றுமையின்றி விரவி நிற்றல் கூடாது! இவ்விருதிறத்தானும் முரணுதலின், இறைவன் எங்கும் உளனல்லன் எனத் துணியலாம் எனின், “அகரவுயிர் இன்றேல் அக்கரங்கள் இல்லை” யாமாறு போல, எவ்விடத்துள்ள எத்திறப் பொருள்களும் இறைவனை இன்றி அமையமாட்டா. எனவே, எங்கும் உளனாய இறைவன் ஞாயிறும் ஒளியும் போல ஒன்றுதற்கும் இரண்டாதற்கும் பொதுவாய்த் தாதான்மியத்தாற் சிவமும் சத்தியும் என்று இயைந்து நிற்பான் என்பதே துணிபொருள். அங்ஙனமாயின், பசுபாசங்களும் வியாபகத் தன்மை யுடையனவாதலின், அவைகளும் இம்முறைமை பற்றி இறைவனைப் போலத் தத்தம் சத்திகளோடு தாதான்மியமாய் நிற்கப் பெறுமோ எனின் - இறைவனது வியாபகத்தை நோக்கப் பசுபாசங்கள் வியாப்பியமாய் உள்ளடங்கி நிற்பனவாதலின், இறைவனுக்குப் பாசங்கள் உடைமையும், பசுக்களாகிய நாம் அடிமையுமாவோம்! ஆணையாகிய சிற்சத்தி இறைவனுக்குப் பண்பு ஆகும் என்றுணர்க!

இவ்விரண்டாஞ் சூத்திரம் பாசமுண்மைக்குப் பிரமாணம் கூறியது. “ஆணையின் இருவினையின் நிற்பன்” எனவே, உலகுக்கு இறைவன் நிமித்தகாரணம்: ஆணையாகிய சிற்சத்தி துணைக்காரணம்; இருவினையும் அதன்வழித்தாகிய துணைக்காரணம்; இருவினைக்குப் பற்றுக்கோடாகிய மாயை முதற்காரணம் என்பன பெறுதும். “இருவினையிற் போக்கு வரவு புரிய” எனவே, ஒடுங்கியின் மீளவுளதாங் கால், உலகம் இருவினைகட்கு ஏற்பப் பலவேறுவகைப்பட்டு

விரியும் என்பது போதரும். வினைக்குத்தொன்மை கூறுவார், இனம் பற்றி மாயை மலங்களுக்கும் தொன்மை கூறினர். வினையானது வன்னம் பதம் மந்திரம் புவனம் கலை தத்துவம் என்னும் அத்துவாக்கள் இடமாக, மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றுன் ஈட்டப்பட்டு, தூல கன்மமாய் ஆகாமியம் எனப் பெயர்பெற்று, பின்னர்ப் பக்குவ மாங்காறும் சூக்கும கன்மமாய்ப் புத்தி தத்துவம் பற்றுக்கோடாக மாயையிற் கிடந்து, சாதி ஆயுள் போகம் என்னும் மூன்றற்கும் ஏதுவாய், முறையே சனகம் தாரகம் போக்கியம் என்னும் மூவகைத்தாய், அபூருவம் சஞ்சிதம் புண்ணிய பாவம் என்னும் பரியாயப் பெயர்கள்பெற்று, பின்னர்ப் பயன்படுங்கால் ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம் ஆதிபௌதிகம் என்னும் முத்திறத்தாற் பலதிறப்பட்டுப் பிராரத்தம் எனப் பெறும்...இருவினையின் காரியம் இன்பத் துன்பம் என்பன. மூலமலத்தின் காரியம் மோகம் மதம் அராகம் கவலை தாபம் வாட்டம் விசித்திரம் என்பன. மாயையின் காரியம் தனுகரணம் புவனம் போகம் என்பன. "வள்ளலால் ஆம்" எனவே திரோதான சத்தியுண்மையும் பெற்றும். திரோதான சத்தியானது பாகம் வருவித்தற் பொருட்டு மலத்தின் வழிநின்று மோகம் முதலியவற்றைத் தொழிற்படுத்துவ தாகிய சிவ சங்கற்பத்திற்கு ஏதுவாதல் பற்றி 'மலம்' என்று உபசரித்துக் கூறப்படும். இவ்வாறு மலம் கன்மம் மாயை திரோதானம் மாயாகாரியம் என்னும் ஐவகைப் பாசமும் கண்டு கொள்க. இவற்றுள் மாயையானது, சுத்தமாயை அசுத்தமாயை என்று இருவகைப் படும். சுத்தமாயையினின்று நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்தியதீதை என்னும் பஞ்ச கலைகளும், சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என்னும் நால்வகை வாக்குகளும், சிவதத்துவங்கள் ஐந்தும், சுத்தகாலம் முதல் சுத்த நிலம் ஈருகிய முப்பத்தொன்றும் தோன்றும். அசுத்த மாயையினின்று அசுத்தகாலம் முதல் அசுத்தநிலம் ஈருகிய முப்பத்தொரு தத்துவங்களும் தோன்றும். இந்தத் தத்துவங்கள் எல்லாம் பொதுவும் சிறப்பும் பொதுச்சிறப்பும் எனத் தனித்தனி மூவகைப்பட்டு, உயிர்கள் தோறும் வெவ்வேறு உளவாம். இவற்றின் விரிவெல்லாம் சிவஞானபோதப் பேருரையுட் கண்டு கொள்க!—முருகவேள் (தொடரும்)

சேக்கிழார் செய்யுள் இன்பம்*

புலவர் முருகவேள், பி. ஓ. எல்.

முன்னுரை

"சேக்கிழார் செய்யுள் இன்பம்" என்னும் தொடரில் அமைந்துள்ள 'செய்யுள்' என்னும் சொல், 'பாட்டு' என இந்நான்று வழங்கும் பொருளில் ஆளப் பெறாமல், 'இலக்கியம்' என்ற பண்டைநாட் பொருளின் குறிப்பில் ஆளப் பெற்றுள்ளது. பண்டை நாளில் 'பாட்டு' என்பதும், 'செய்யுள்' என்பதும் வேறு வேறு பொருள்களைச் சுட்டி நின்றன. "சிலப்பதிகாரம் என்னும் பெயரால் நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" என வரும் இளங்கோவடிகளின் திருமொழியால், 'செய்யுள்' என்பது பாட்டின் வேறு என்றும், அஃது 'இலக்கியம்' என்னும் பொருளிற் பண்டு வழங்கியது என்றும் உணரலாம். "உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்" என்று சிலப்பதிகாரத்திற்கு வழங்கப்பெறும் ஒரு பெயரும் ஈண்டைக்கு எண்ணுதற்குரியது. எனவே, "சேக்கிழார் செய்யுள் இன்பம்" என்னும் தொடர், சேக்கிழார் அருளிச் செய்த இலக்கியமாகிய பெருநூலின் இன்பம் எனப் பொருள்படும்.

சேக்கிழார் அருளிச் செய்த இலக்கியம் பெரிய புராணம் ஆகும். "இலக்கியம்" என நாம் இந்நாளிற் குறிப்பிடும் சொல்லினையே "இலங்கு நூல்" எனத் திருவள்ளுவர் வழங்கினர். இன்று தோன்றி நாளை மறைந்தொழியும் புன்சிறு நூல்கள் போலன்றி, என்றும் நின்று நிலவி வழங்கி விளங்கிவரத் தகுந்த பெருநூல்களே "இலங்கு நூல்" என வினைத்தொகை நிலைத்தொடராற் குறிப்பிடப்பெறும் சிறப்புடையனவாகும். ஜான் ரஸ்கின் (John Ruskin) என்னும் ஆங்கில ஆசிரியரும் இத்தகைய பெருநூல்களையே (Books for Ever) "என்றைக்கும் உரிய நூல்கள்" எனப் புகழ்ந்து

---

*குன்றத்தூர்ச் சேக்கிழார் திருப்பணிக் கழகச் சார்பில், 15—6—56 வெள்ளியன்று, மயிலாப்பூர் பெ. சு. உயர்நிலைப் பள்ளியிற் பேசியதனைத் தழுவியது.

போற்றினர். சேக்கிழாரடிகளின் பெரியபுராணமானது, என்றும் நின்று நிலவி வழங்கி விளங்கிவரத் தகுந்த பெருஞ் சிறப்பினதாயதோர் இலங்குநூல் ஆகும். தண்டமிழின் மேலாந் தரத்தனவாகப் போற்றப்பெற்று வரும் தலைசிறந்த நூல்களின் வரிசையில், பெரியபுராணம் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வதற்குரிய தொன்றாகும். "ஒள்ளியசீர்த் தொண்டர் புராணம்" என இரண்டு அடைகள் கொடுத்துச் சான்றோர்கள் இதனைப் போற்றிவந்துள்ளனராதலின், ஏனையவற்றினும் மேலாந்தரமாகக் கொள்ளத் தகுந்தது பெரியபுராணமேயாம் எனத் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் அடிக்கடி அறிவுறுத்துவர்.

"சிறப்புடைய புராணம்"

அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழியின்கண் புராணங்கள் என்னும் பெயரால் நூல்கள் பல வழங்கி வருகின்றன. அப் புராணங்களை யெல்லாம் பற்றிப் பல திறக் கருத்துக்கள் இன்று நாட்டில் உலவி வருகின்றன. அஃதெங்ஙனமாயினும், புராணம் என்ற பெயர்ப்பொதுமை ஒன்றே கருதிப் பெரியபுராணம் எனப் பெயரிய திருத் தொண்டர் புராணத்தினையும், "கருங்கோளும் செங்கோள் ளும் தூணிப் பதக்கென்று ஒருங்கோப்பக் கொண்டானும் ஊரன்" என்றாற்போல, ஏனைய புராணங்களோடு இடைத்தெரிவு இன்றி ஒப்ப வைத்து எளிதாக எண்ணி இகழ்ந்து விடுதல் அமையாது. புராணங்கள் எனப்படுவனவற்றில் மிகப் பெரும்பாலன மொழிபெயர்ப்புக்களாகவும், உண்மையில் நிகழாதனவாகவும், தமிழ்நாட்டின் பண்பாட்டினை விளக்காதனவாகவும், வெறும் கவிதைக் கற்பனைகளாகவும், இன்ன பிறவாகவுமே இருக்கக் காண்கின்றோம். இன்னோரனைய ஏனைய இழிந்த சில சுவடிகளினின்று பெரியபுராணம் போன்ற அருள்நூல்களின் பெருமையினை வேறு பிரித்து விலக்கி யுணர்த்துதற் பொருட்டே, ஆசிரியர் அருள்நந்தி சிவனார் "புறச்சமய நெறி நின்றும் அகச்சமயம் புக்கும்..." எனத் தொடங்கும் சிவஞான சித்தியார் திருப்பாடலின்கண், "சிறப்புடைய் புராணங்கள் உணர்ந்தும்" எனத் திறந் தெரிந்து விளக்கியருளினராதல் வேண்டும்!

பிற நூல்களும், பெரியபுராணமும்

சேக்கிழார் அடிகளின் பெரியபுராணம் சிறந்ததொரு செஞ்சொற்காப்பியம் ஆகும். "தன்நிகர் உயர்ச்சி இல்லான் காப்பியத் தலைவன்" எனச் சான்றோர்கள் வகுத்த முறைமைக்கு ஏற்ப, நம்பியாரூரர் பெருமானைக் காப்பியத் தலைவராகக் கொண்டு பெரியபுராணம் இயன்றுள்ளது. ஐம்பெருங் காப்பியங்களுள் இன்றளவும் நின்று நிலவிப் பெருஞ் சிறப்புடையனவாய்ப் போற்றப் பெற்று வரும் சீவகசிந்தாமணி மணிமேகலை சிலப்பதிகாரம் போன்ற பெருங்காப்பியங்களும் பெரியபுராணத்திற்கு ஈடாகும் தகுதிப்பாடுடையன அல்ல. சீவகசிந்தாமணி சொற்பொருள் நலங்களின் முதிர்ந்து கவிதைச் சுவை நிரம்பியதேயாயினும், 'ஒருவனுக்கு ஒருத்தி' என்னும் தமிழ்ப் பண்பாட்டிற்கு மாறானதாய், இழிந்த காமவின்பத்தினையே பெரிதெடுத்துப் பேசுவதாய்ப் பொய்யாய்க் கற்பனையாய் மொழிபெயர்ப்பாய்க், கதையமைப்பின்கண் சிறிதும் சுவையில்லதாய்க் காணப்படுகின்றது! மணிமேகலை உண்மையாக நடந்த நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டே இயன்றுளதாயினும், இடையிடையே இயற்கைக்கு மாறான பொய்ம்மை நிகழ்ச்சிகளையும் விரவிக் கூறுவதாய், துறவு நெறியினையும் புத்த சமயத்தினையுமே சிறந்தெடுத்துக் கூறி ஏனையவற்றை இழித்துரைக்கும் குறிப்பினதாய், ஒரே தன்மையவாய் வெவ்வேறு வகையான உணர்ச்சி நலங்களைச் செவ்விதின் விளக்குதற்கு இயலாத அகவற் பாக்களினல் மட்டுமே ஆக்கப்பட்டதாய், சமய நூற் பொருண்மைகளையும் அளவை நூற் கருத்துகளையும் அறிஞர்கள் வியக்கும் அருமைப்பாட்டுடன் விளக்கினும் ஆங்கெல்லாம் கதைச் சுவையும் கவிதைச் சுவையும் குன்றி வெறுஞ் சொல்லடுக்காய்ச், சங்ககாலப் புலனெறி வழக்கிற்கு மாறாகப் பிறமொழிச் சொற்கலப்பு மிக்கதாய்த், தமிழ் நாட்டிற் சமயப் பிணக்கின் சழக்குகள் தோன்றுதற்கு முதன்முதல் ஓராற்றல் இடமளித்ததாய் விளங்குகின்றது! சிலப்பதிகாரம் மக்கள் உள்ளம் ஆங்காங்கே நிகழும் நிகழ்ச்சிகளால் ஈர்ப்புண்டு எவ்வெவ்வாறு அசைவுறுகின்றதோ, அவ்வவ்வாற்றிற் கிசைந்தபடி யெல்லாம் பலதிறப் பாக்களானும் இசை தழுவி யாக்கப்பட்டுத், தான் கூறும் கதை

நிகழ்ச்சிகளை நம்மனோர் கண்முன்னே கொணர்ந்து நிகழ்த்திக் காட்டிப், பல்வகையுணர்வெழுச்சிகளால் நம் நெஞ்சையெல்லாம் அள்ளிக் கொள்ளைகொள்ளும் திறத்ததாய், உண்மையை உள்ளபடி எடுத்துச் சொற்சுவை பொருட்சுவை துளும்பத் தொடுத்து, இசைத்தேன் துளிக்க மிழற்றும் சிறப்பினதாய் விளங்குகின்றதெனினும், அதுதானும் நம்மையே போன்று குறைபாடுகள் பலவுடைய மக்கள் சிலரின் பொதுமை எளிய வாழ்க்கை நிகழ்ச்சிகளையே தனக்கு அமைந்த அரும்பொருளாகக் கொண்டு யாக்கப் பெற்றிருக்கின்றது. மக்களை மேல்நிலைக்கண் உய்க்கும் இறையருளியல் விளக்கப் பெருஞ் சிறப்பு நலம், பெரியபுராணத்திற் காணப்படும் அத்துணையளவுக்கு இந் நூல்களிற் காணப்படுகின்றிலது. "செப்ப லுற்ற பொருளின் சிறப்பினால் இப்பொருட் கென்னுரை யாவரும் கொள்வரால்" எனச் சேக்கிழார் பெருமானே விதந்தெடுத்துக் கூறுதல்போலச், செப்பலுற்ற பொருளின் சிறப்பு ஒன்று மட்டுமேயன்றி, செப்பலுறுவோன் சிறப்பும், செப்பலுறும் முறைமையின் சிறப்பும் ஆகிய ஏனைய பிற சிறப்புக்களும் கூடப் பெரியபுராணத்திற்கு உண்டு! எனவே, மேலே குறித்த பிற நூல்களெல்லாம் பெரியபுராணத்திற்கு எவ்வாற்றானும் இணையாகமாட்டா எனக் கூறுதல், வாய்மை மிக்க இயல்புரையே யன்றி, வாரம் பட்ட இழித்துரை யாகாது. இக்கருத்து, பேராசிரியர் தமிழ்க்கடல் சிவந்திரு. மறைமலை அடிகளார் அவர்களால் நன்கினிது விளக்கப்பட்ட தொன்றாகும். அவர்கட்குப் பெரியபுராணத்தின்பால் இருந்த ஈடுபாடு அளவிடற்கரியது!

சேக்கிழார் நூற் சிறப்பு

இத்தகைய நமது அருமைப் பெரியபுராணம், ஏனைய சில புராணங்கள்போல வெறும் மொழிபெயர்ப்பு வழிநூல் அன்று; தமிழிலேயே எழுந்த தனிப்பெரு முதல்நூல்! உண்மையாகவே நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்த அரும்பெரும் நூல்! கல்வெட்டு செப்பேடு இலக்கியம் கவிதை மரபு என்னும் பலதிறச் சான்றுகளைத் தழீஇய நூல்! தமிழ்நாட்டின்கண் வாழ்ந்து செயற்கருஞ் செயல்கள் பல செய்து சிறந்த தமிழ்ப்பெருஞ்

சான்றோர்களைப் பற்றிக் கூறும் செந்தமிழ்த் திருநூல்! வெறும் கவிதைக் கற்பனை நூல் அன்று, உண்மை வரலாற்று ஆராய்ச்சி நூல்! இலக்கிய நலங்கள் பல செறிந்த இன்பத் தமிழ்ப் பெருநூல்! இடைக்காலத் தமிழகத்தின் நிலைகளை யெல்லாம் எழிலுற விளக்கும் இனிய கலை நூல்! சங்க காலத்திற்கு அடுத்துத் தமிழகத்தில் எழுந்த புதியதொரு பண்பாட்டுப் புரட்சி மறுமலர்ச்சி அருள் இயக்கம் பற்றியும், அவ்வியக்கத்தில் ஈடுபட்டுத் தலைமை தாங்கித் தொண்டாற்றி நின்று மன்பதையை என்ஞான்றும் வாழ்வித்த நம் சான்றோர் பெருமக்கள் பலரைப் பற்றியும், நமக்கு இனிதெடுத்துரைத்து விளக்கும் நலஞ்செறிந்த பயன்மிகு நூல்! ஒப்புயர்வற்ற அன்பருட் பேரிலக்கிய நூல்! அரசியல் அருநூல்! உலகியல் நீதி நூல்! வரலாற்று வாய்மை நூல்! தமிழ்க் காவிய நூல்! சைவ சமயச் சிறப்பு நூல்! சைவ சித்தாந்தச் செம்பொருள் நூல்! திருமுறை யாராய்ச்சியுரை நூல்! சீர்திருத்த நூல்!

ஆங்கில மொழியில் ஷேக்ஸ்பியர், ஸ்காட், வோர்ட்ஸ் வொர்த், பர்ன்ஸ், தாமஸ் ஹார்டி முதலிய ஆசிரியர்கள் எழுதிய நூல்களைப் பயின்றவர்கள், அவ்வாசிரியர்களால் தத்தம் நூல்களில் புனைந்துரைக்கப் பெற்ற வார்விக்ஷயர், பார்டர்லண்ட், கம்பர்லண்ட்-வெஸ்ட்மோர்லண்ட், அயர்ஷயர், வெஸ்ஸெக்ஸ் என்னும் ஆங்கில நாட்டின் பகுதிகளைக் காணுந்தோறும் பிறர்காணு வகையிற் பெருஞ் சிறப்பினவாகத் தமது இலக்கியக் கண்களாற் காண்பார்கள். அவ்வாறே, பெரியபுராணம் பயின்றவர்கள் தமிழ்நாட்டினைக் காணுங்கால், அதனைப் பயிலாத ஏனையார் போலன்றிப் புதிய பெருநோக்குடன் “ தாவில் சராசரங்களை யெல்லாம் சிவம் பெருக்கும் ” திருவுடையனவாகக் கண்டு மகிழவல்லவர்களாவார்கள். பெரியபுராணம் பயின்றார்க்குத் தமிழ்நாட்டின் மண்ணும் மரமும், யாறும் மலையும், நாடும் நகரமும் பிறவுமெல்லாம் புத்தொளி பெற்றுத் தோன்றும்.

“Finds tongues in trees, books in the running brooks,
Sermons in stones, and good in every thing”

என்று ஷேக்ஸ்பியர் பாடுவதுபோல, பெரியபுராணம் பயின்றவர்கள் தமிழ்நாட்டின் ஒவ்வொரு பொருளிலும்

பிறர்காண வியலாத தெய்விகப் பேரொளியைக் கண்டு கண்டு மகிழும் பேறு பெறுவார்கள். “ அருட்கண் இல்லாதார்க்கு அரும்பொருள்கள் தோன்ற.” இத்தகைய பெரிய புராணத்தின் பெருமை நிலத்தினும் பெரிது, வானினும் உயர்ந்தன்று, நீரினும் ஆரளவின்று! அதன்கண் வரும் இன்பம் தரும் எழில் மிக்க செய்யுள்கள் சிலவற்றைமட்டும் ஈண்டுக் காண்போம்!

சேக்கிழார் செய்யுள் இன்பம்

சேக்கிழார் பெருமான் இறையருள்நலத்தில் தோய்ந்து திளைத்த சிந்தை வாய்ந்தவர். இறையருளின்ப நுகர்வுணர்வு நலம் மிகுந்து நிறைந்த பெருஞ் சான்றோர். எனவே, அவர் தம் கவிதைகளில் இறையருளுணர்வே எங்கும் பொங்கித் ததும்பிப் பொலிந்து மேலோங்கித் தோன்றுகின்றது!:—நம்பியாரூரர் பரவையார்பாற் காதல்கொண்டு மயங்கி வருந்தும் மாலை வேளையில் நீண்டகன்ற வானமானது, பிறரை மயக்கிப் பிழைக்கும் பரத்தையராய ‘பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்’ கள்ளும் களவும் காமமும் பொய்யும் கொலையுமாயவற்றைச் செய்துழலும் ‘வஞ்ச மாக்கள் தம் வல்வினையும்’ ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்க்க வல்ல ‘பரன் அஞ்செழுத்தும் உணரா அறிவிலார் நெஞ்சும்’ போல இருள் சூழ்ந்தது. (தடுத். 159). அதுபொழுது வெண்ணிலா முகிழ்த்த தன்மை, மாசற்ற மனமுடைய வன்தொண்டரே ஒரு பெண்ணின் பொருட்டு இவ்வாறு வருந்துவராயின், வேறு பிறர் யார்தான் பெண்களின் பெருமயக்கினின்று தப்பிப் பிழைப்பார்கள் என்று, “ நறுமலர்க் கங்குல் நங்கை முன்கொண்ட புன்முறுவல் ” போல விளங்கியது (160). ஞாயிற்றின் வெம்மைக்கு அஞ்சிக் குவிந்திருந்த ஆம்பல் மலர்கள், வெண்நிலா முகிழ்த்ததும் அதன் பனிமதிக் கரங்கள் தீண்ட அலர்ந்த தன்மை, “ அரந்தை செய்வார்க்கு அழுங்கித் தம் ஆருயிர் வரன் கைதீண்ட மலர்குல மாதர்போல் ” இருந்தது (161). இங்ஙனம் ஆம்பல்கள் மலரத் தோன்றிய திங்களின் நிலவொளியானது, மன்னுயிர்களுக்கெல்லாம் தூய்மையும் இன்பமும் தண்மையும் தந்து, சிவபெருமானின் வெண்திருநீற்றின் பேரொளியைப்போல உலகமெங்கும் பரவிநின்றது (162).

சீர்காழிப் பெரும்பதியின்கண், பரந்த வயல்களில் வளர்ந்துள்ள செந்தாமரை மலர்களாகிய நெருப்பில், அடுத்து வளர்ந்துள்ள மாமரங்களின் கனிகள் பழுத்து முதிர்ந்து சொரியும் தேனாகிய நெய்யினை, மாஇலைகளின் நுனி வழியாக ஒழுக விடுதலினால், மரங்களும் ஆகுதி வேட்கும் மாண்புடையனவாக வயங்குகின்றன (திருஞா.7). அழகு மிகுந்த அச்சீர்காழிப் பதியில், புல்லிய இதழ்களையும் நூலையும் கொண்டனவாய், மகரந்தமாகிய துகளையணிந்து, தூய கள்ளாகிய நீர் ததும்பி, வண்டுகளின் இசையெழுந்து மலர்ந்தொளிரும் தாமரைப் பூக்கள் தாமும், தருப்பைப் புல்லினை ஏந்தியவர்களாய்ப் பூணூலை அணிந்து, திருநீறு தரித்து, அன்பாற் கண்களினின்று நீர் பெருக்கிச் சாம வேதம் பாடிச் சிவபெருமானை வழிபடும் வேதியர்களைப் போல விளங்குகின்றன (9). திருமுனைப்பாடி நாட்டில், வாழைக்குலைகள் யானைத் துதிக்கை போலவும், செந்நெற் கதிர்கள் குதிரைமுகம் போலவும், பெரிய வண்டிகள் தேர்களைப் போலவும், உழவர்களின் முழக்கம் காலாட்படை வீரர்களின் முழக்கம் போலவும் உள்ளமையால், அங்கே மருதநிலமானது நால்வகைப் படைகளும் ஒருங்கு சேர்ந்துள்ள இடம்போலத் தோன்றுகின்றது (திருநா. 6). அத் திருமுனைப்பாடி நாட்டிற் செறிந்து திகழும் சோலைகளின் காட்சி, நிலமகளாகிய பெண், கருவண்டின் கூட்டமாகிய நீல வளையல்களை அணிந்து, சிவந்த தளிர்கள் கைவிரல்களாகவும், அரும்புகள் நகங்களாகவும் அமைய, வானளாவ ஓங்கிய மரவரிசைகளாகிய கைகளால், சந்திரனாகிய கண்ணாடியினை எடுத்தணைத்துத் தன் உடலழகினைக் காண்பதுபோல இருக்கின்றது (9). தீப மரங்களின் ஒளியினாலும், குரங்குகள் குகைகளிற் கொண்டுபோய் வைத்த மணிகளாகிய விளக்குகளின் ஒளியினாலும், ஐம்பொறிகளை வென்று அறுவகைப் பகைகளை நீக்கிய அருட்பெருஞ் சான்றோர்களின் தவப்பேரொளியினாலும் காளத்தி மலையின்கண் இரவு என்பதொன்றில்லை (கண். 131) என்பன போல வரும் சேக்கிழாரின் எண்ணிறந்த செய்யுள்களின் இன்பம் இனையதெனை ஒண்ணுமோ?

" ஓதிய எழுத்தாம் அஞ்சும், உறுபிணி வாத்தாம் அஞ்சும் !"

என்பனபோன்று ஆங்காங்கு இடையிடையே போதரும்

அடிகளின் அருமை பெருமைகளைத் தானும் அளவிட்டுரைத்தல் எம் ஒரு சிறு நாவிற்கு ஒல்லுமோ? "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே!"

முடிப்புரை

உணவின்கண் ஆறு வேறுவகைச் சுவைகளைக் கண்டுணர்ந்தமைத்த பழந்தமிழ்ப் பெருமக்கள், உணர்வின்கண் ஒன்பான்வகை உயரிய சுவைகளைக் கண்டுணர்ந்தமைத்துக் கவிதைகள் பாடி இலக்கியங்கள் இயற்றித் தமிழ் மொழியினை வளர்த்து வந்துள்ளனர். ஆசிரியர் சேக்கிழார் பெருமான், நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை நடுவுநிலை என்னும் அவ்வொன்பான் சுவைகளோடு, பத்திச்சுவை என்னும் மிக மேலான பெருஞ்சுவையினையும் பத்தாம் சுவையாகக் கண்டு சிறப்புற அமைத்துப் பெரியபுராணம் என்னும் அரும்பெறல் நூலினை இறையருள் துணைகொண்டு நம்மனோர்க்கு இயற்றியளித்து உதவியுள்ளார். அந்நூலினை இடையறாது ஓதி இன்புற்று வருதல், இறைவனுக்கு நாம் செய்யத் தகுந்த "எழில் ஞான பூசை"யாகும்!

தேக்கு பெரும்புலமைச் செம்மலாம் நம்மருமைச்
சேக்கிழார் பெம்மான்றன், தெய்வநல—நோக்கமைந்த
செய்யுளின்பச் சீர்த்தி, சிறியேன் தெருட்டுவனோ?
மெய்யதற்கிங் கீடில்லை வேறு! —முருகவேள்

தமிழிசைக்குருகும் தழல் மேனியன்

கோவை - ச. கா. சிரங்கம் அவர்கள்

"சலம்பூவொடு தூப மறந்தறியேன் தமிழோடிசை பாடல் மறந்தறியேன், நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன் உன்னாமம் என்னாவில் மறந்தறியேன், உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய் உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய், அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில வீரட்டானத் துறை யம்மானே"

இது திருநாவுக்கரசு நாயனர் பாடிய "கூற்றாயினவாறு" என்னும் பதிகத்தில் வரும் ஆறாவது பாடலாகும்; சுவாமிகள் அவர்கள் தெய்வச் சைவமாம் நம் சமயம் துறந்து குண்டர்தம் சமயம் சமணத்தைச் சார்ந்ததால் இறைவன்

அவர்பால் கருணைகூர்ந்து தீராச் சூலை நோயை உண்டு பண்ணினர். அது தீரும் பொருட்டுச் சமணர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் அது தீரவில்லை. அதன் பிறகு தன் உயிரினும் சிறந்த தமக்கையின் சொற்படி செஞ்சொல் மாலை புனைந்து பாடினர். அப்பொழுது அவருக்குப் பிடித்திருந்த சூலை நோய் நீங்கிற்று. அத்தருவாயில் இறைவனை எத்தி மனங் கசிந்து, உள்ளம் உருகி நெக்கு நெக்கேங்கிப் பாடிய பாட்டின் நயமும், நயத்திலே கமழும தெய்வமணமும், மணத்திலே மண்டிக்கிடக்கும் மருந்தும், அம்மருந்தின் மாண்பை எண்ணி, எண்ணி நாவுக்கரசர் அப்பதிகத்தைப் பாடி முடித்த தன்மையை என்னென்று விரிப்பது! படித்தாலே அதன் பக்குவம் விளங்கும். "சலம் பூவொடு தூபம் உனக்குச் சாற்ற இனி மறக்க மாட்டேன், தமிழோடு இசை பாட இனி நான் மறந்தறியேன், நலத்திலும், தீங்கிலும் உன்னை என்றும் மறவேன், எனக்கு ஏற்பட்ட இந்தக் கொடிய சூலையைத் தவிர்த்தருள்வாய் என்று எம்மானை இறைஞ்சினதும், கண்ணுதற் கடவுளரும் கருணை மேலீட்டால் சூலையைத் தவிர்த்தருளினர். ஆகவே இதில் இறைவன் இசைக்கு இயங்கும் தன்மையும், அதிலும் தமிழ் இசைக்குச் செந்தழல் மேனியன் செவிசாய்க்கும் செழுங் குணமும் மிக அற்புதமாக விரித்துள்ளது: இவ்வாறு தமிழின் இசைக்குத் தயங்காமல் பின் செல்லும் தன்மை இறைவனுக்குத்தான் எத்தனை இன்பத்தைத் தருகிறது: எத்தகைய குற்றம் புரியினும் தமிழ் இசையோடு இறைவனைப் பாடினல் அப்பாடலுக்கு இறைவன் இரங்கி விடுகிறன். அவ்வளவு சுவை, என் அப்பனுக்கு என்று அடியார்கள் பல இடங்களிலும் விரித்துச் சொல்லிப் போந்துள்ளார்கள். சிலவற்றை இங்குக் காண்போம்.

அப்பர் சுவாமிகள் காலத்திலேயே வாழ்ந்தவர் ஞான சம்பந்தர். இருவரும் திருமறைக் காட்டில் செய்த அற்புதமும் அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சியும் என்னென்றுரைப்பது? நெடுநாட்களாகக் கதவு ஒன்று சாத்தியபடியே கிடந்தது. கோயிலுக்குப்போவோரும், வருவோரும் வேறுவழியாகத்தான் போய்க்கொண்டும் வந்து கொண்டும் இருந்தார்கள். அடியார்கள் இருவரும் இவ்விஷயம் கேட்டு அதிக ஆச்

சரியமுற்றார்கள். கோயிலின் கதவு சாத்தியே கிடக்கக் காரணம் தெரிந்தார்கள். உடனே ஞானசம்பந்தர் அப்பரே இக்கதவு திறக்கப் பாடும் என்றார். நாவுக்கரசர் உடனே தனக்கே உரித்தாம் செஞ்சொற் பதிகம் முக்கணன் கேட்கும்படிக்கு இசைத்தார். அடியார் வாயிலினின்றும் தமிழ் இசை எப்பொழுது வருமோ என்று ஏங்கி இருப்பானே என்னவோ இறைவன். பாட்டு முடிந்தது; கதவு திறந்துவிட்டது. யாவரும் கண்டு வியந்தனர். திறந்த கதவை மூடவேண்டும் என்று ஞானசம்பந்தர் தன் சின்ன வாய் திறந்து செந்தமிழ் இசைத்தார்; இசைத்த அடி முடிவதற்குள் கதவு மூடிக் கொண்டது. அது முதல் கதவு திறக்கவும், மூடவும் முடிந்தது: இதை அப்பர் சுவாமிகள் மிக அழகாக அகங்குழையத் திறக்கப் பாடிய என்னிலும், அடைக்கப் பாடிய சம்பந்தர் திறமே திறம் என்று வாயாரப் புகழ்கிறார்.

செந்தமிழ் இசையை இறைவனுக்கு அர்ப்பணித்த அடியார்கள் கண்டு களித்த உண்மை இது. இன்னும் இத்தகைய அடியார்களுக்கு இறைவன் செய்த உதவிகள் தான் எத்தனை.

சின்னஞ் சிறு கைகளைக் கொட்டி இசை பாடுகிறாராம் ஞானசம்பந்தர். சிறிய வயதல்லவா? சம்பந்தருக்கு. ஆகவே கைகள் இரண்டும் வலிக்குமாம்; வலி அதிகமாகி விட்டால் குழந்தை பாட்டை நிறுத்திவிடும். அப்புறம் எப்படிப் பாட்டை நுகர்வது என்று நினைத்திருப்பானும் இறைவன். ஆகவே கைகள் வலிக்காமல் இருப்பதற்கு இரண்டு பொன்தாளம் கொடுத்தாராம். பொற்றாளம் கைக்கொண்டு பிள்ளையும், ஓயாது தமிழ் பாடி நாற்புறமும் பரப்பிற்றும். இந்த இரண்டு செய்கைகளையும் சுந்தரர் "நாளு மின்னிசையால்........." என்னும் பாடல் பாடிப் பரவசமெய்துகின்றார். இன்னும் இத் தித்திக்கும் மதுரத் தமிழுக்காக இறைவன் எத்தனை எத்தனையோ திருவிளையாடலைப் புரிந்து இருக்கின்றான். பரஞ்சோதியார்,

"கண்ணுதற் கடவுளும் கழக மோட மர்ந்து
பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ்"

என்று தமிழுக்கு ஏற்றம் கொடுத்து இறைவனின் இன்பத்தையும் ஏத்திப் புகழ்ந்து பாடுகின்றார். இச் செந்தமிழ்

பாடும் இசைப் புலவர்களுக்குத்தான் இறைவன் எத்தனை உதவிகள் புரிந்திருக்கின்றார். தன் செந்தாமரைத் திருவடி நோக, கங்கையும், மதியும் பாம்பும், கடுக்கையும், வைத்திருக்கும் முடிமேல் காட்டிலே கிடக்கும் உலர்ந்த விறகுக் கட்டைகளைச் சுமந்து, அத் தெய்வமணம் கமழும் திருக் கூடல் வீதியில் நடந்து வந்த திறம், அந்தச் செந்தமிழ்ப் பாவாணர் பாணபத்திரன் பொருட்டாலன்றோ !

> கடிய கானகம் புகுதவோ, கட்டிய விறகை முடியி லேற்றவோ
> முண்டகத்தாள்க ளொந்திட வந்தடியனேன்...........

என்று பரஞ்சோதியார் தாம் பாடிய திருவிளையாடற் புராணத்தில் "விறகு விற்ற படலம்" என்ற பகுதியில் இறைவனின் பெருமையை எடுத்தோதுகிறார். இதேபோல் சுந்தரர் தம் வாயினாலேயே இறைவன் தனக்காகச் செய்த பேறுகளை "ஏழிசையாய்........" என்னும் தேவாரத்தில் மனங் கசிந்து பாடுகிறார்.

இறைவனின் பிரிவாற்றுமையும், இறைவன் தன் பால் கொண்ட பெருங் கருணையும் எங்ஙனம் மிளிர்கிறது. இந்த அடிகளை நுவல்தொறும் நுவல்தொறும், வாயெல்லாம் மணக்கும், மதியெல்லாம் மணக்கு மல்லவா ? இவையெல்லாம் தமிழின்பால் இறைவன் கொண்ட தனிப் பெருஞ் சுவையல்லவா ? இத்தகைய தமிழில் இறைவனைப் பாடியும், ஆடியும் புகழவேண்டுவது தமிழ் மக்கள் கடமையல்லவா ? எங்கென்று காணப்படாத இறைவன் தமிழுக் கென்று ஓடோடி வந்து விடுகின்றானல்லவா ? தமிழ் என்றால்தான் இறைவனுக்கு என்ன ஆனந்தம் ! அதற்காக அதாவது தமிழைப் புலவர்கள் அடியார்கள் வாயிலாகக் கேட்கத்தான் எத்தனை அவதாரம். இதைக் குமரகுருபர சுவாமிகள் அருளிய "தமரநீர்ப்புவனம்........" என்னும் பாடலில் தமிழுக்கு உள்ள ஏற்றத்தை எடுத்துக் காட்டுகிறார். இத்தகைய தமிழிலே எழுந்த தேவாரம், திருவாசகம் திக்கெல்லாம் பரவவேண்டுவது நம்போன்றார் கடமையல்லவா ! இத் தேவார திருவாசகங்களுக்கே இறைவன் உருகுவான். இது அடியார்கள் கண்ட அனுபவ உண்மையுமாகும். தமிழிசைக்கே உருகுவான் தழல்மேனியன் என்பதற்கும் ஐயமுண்டோ ?

சித்தாந்த சாதனக் கட்டளை*

சாதனம்: சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வகைப்படும்.

1. சரியை: தேகத்தினைச் சிவார்ப்பிதஞ் செய்தல். அதாவது, புறத்தொழின்மாத்திரையானே முதல்வனுடைய உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. இது சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என நால்வகைப்படும்.

(i) சரியையிற் சரியை: சலசுத்தி முதற் சுத்திசெய்து பீஜ மந்திரங் கூடாமல் ஆசமனம், இதயாதிகளினல் அங்க நியாசம், விபூதி தாரணம், சடங்க நியாசம், மார்ச்சனம், அகமருடணம், சிவ மூலமந்திரம், பரமேசுவரி மந்திரம், கணபதி மந்திரம், சுப்பிரமணிய மந்திரம், குரு - ஆதித்தன்-இருடிகள் - மனுடர் - பூதங்கள் - பிதிர்கள் ஆகிய இவர்களுக்குத் தருப்பணம் முதலியவைகளை யுணர்த்துவது.

(ii) சரியையிற் கிரியை: திருக்கோயிலின் நியதிசெய்யுமளவில் சாயையை மிதியாதிருத்தல், எச்சி லுமிழாதிருத்தல், சிவ நின்மாலியஞ் சேரப்பட்ட சண்டேசுரத்தானம், நின்மாலியம் விழும்கோமுகத்தானம் இவற்றைக் கடவாதிருத்தல், பலிபீடத்தையும் இடபதேவரையும் குறுக்கிடாதிருத்தல், தெய்வத் தானங்களிற் கால் நீட்டாதிருத்தல், விரைய வாராமலும் ஒன்று இரண்டு பிரதட்சணம் பண்ணாமலுமிருத்தல், திருவலகாற் கிருமிகள் சாகாமல் மேற்பட அலகிடல், சாணகங் கொள்ளுமிடத்து ஈன்றணியதும் நோயுள்ள தல்லாததுமான பசுக்களிற் சாணகம் பூமியிலே விழு முன்னே இலையி லேற்றுக் கொள்ளல், அன்றிச் சுத்த நிலத்தில் விழுந்தால் மேல் கீழ் தள்ளி நடுப்பட வெடுத்து நதி ஓடைவாவியாதிகளில் வடித்தெடுத்த திருமஞ்சனத்தால் மெழுகிடல், நந்தவன முண்டாக்கல், இண்டை-தொடை-கண்ணி - பந்து - தண்டிற் கட்டுவ

---

*மதராஸ் ரிப்பன் அச்சகத்தார் 1924-இல் வெளியிட்ட பிரதியைக் கொண்டு ஒப்பு நோக்கப்பட்டது—தீ. கி. நா.

பாடும் இசைப் புலவர்களுக்குத்தான் இறைவன் எத்தனை உதவிகள் புரிந்திருக்கின்றார். தன் செந்தாமரைத் திருவடி நோக, கங்கையும், மதியும் பாம்பும், கடுக்கையும், வைத் திருக்கும் முடிமேல் காட்டிலே கிடக்கும் உலர்ந்த விறகுக் கட்டைகளைச் சுமந்து, அத் தெய்வமணம் கமழும் திருக் கூடல் வீதியில் நடந்து வந்த திறம், அந்தச் செந்தமிழ்ப் பாவாணர் பாணபத்திரன் பொருட்டாலன்றோ !

கடிய கானகம் புகுதவோ, கட்டிய விறகை முடியி லேற்றவோ
முண்டகத்தாள்க ளூர்ந்திட வந்தடியனேன்............

என்று பரஞ்சோதியார் தாம் பாடிய திருவிளையாடற் புராணத்தில் "விறகு விற்ற படலம்" என்ற பகுதியில் இறைவனின் பெருமையை எடுத்தோதுகிறார். இதேபோல் சுந்தரர் தம் வாயினலேயே இறைவன் தனக்காகச் செய்த பேறுகளை "ஏழிசையாய்........" என்னும் தேவாரத்தில் மனங் கசிந்து பாடுகிறார்.

இறைவனின் பிரிவாற்றுமையும், இறைவன் தன்பால் கொண்ட பெருங் கருணையும் எங்ஙனம் மிளிர்கிறது. இந்த அடிகளை நுவல்தொறும் நுவல்தொறும், வாயெல் லாம் மணக்கும், மதியெல்லாம் மணக்கு மல்லவா ? இவை யெல்லாம் தமிழின்பால் இறைவன் கொண்ட தனிப் பெருஞ் சுவையல்லவா ? இத்தகைய தமிழில் இறைவனைப் பாடியும், ஆடியும் புகழவேண்டுவது தமிழ் மக்கள் கடமை யல்லவா ? எங்கென்று காணப்படாத இறைவன் தமிழுக் கென்று ஓடோடி வந்து விடுகின்றானல்லவா ? தமிழ் என்றால்தான் இறைவனுக்கு என்ன ஆனந்தம் ! அதற்காக அதாவது தமிழைப் புலவர்கள் அடியார்கள் வாயிலாகக் கேட்கத்தான் எத்தனை அவதாரம். இதைக் குமரகுருபர சுவாமிகள் அருளிய "தமரநீர்ப்புவனம்........." என்னும் பாடலில் தமிழுக்கு உள்ள ஏற்றத்தை எடுத்துக் காட்டு கிறார். இத்தகைய தமிழிலே எழுந்த தேவாரம், திருவாசகம் திக்கெல்லாம் பரவவேண்டுவது நம்போன்றார் கடமை யல்லவா ! இத் தேவார திருவாசகங்களுக்கே இறைவன் உருகுவான். இது அடியார்கள் கண்ட அனுபவ உண்மையு மாகும். தமிழிசைக்கே உருகுவான் தழல்மேனியன் என்ப தற்கும் ஐயமுண்டோ ?

சித்தாந்த சாதனக் கட்டளை*

சாதனம்: சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வகைப்படும்.

1. சரியை: தேகத்தினைச் சிவார்ப்பிதஞ் செய்தல். அதாவது, புறத்தொழின்மாத்திரையானே முதல்வனுடைய உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. இது சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என நால்வகைப்படும்.

(i) சரியையிற் சரியை: சலசுத்தி முதற் சுத்திசெய்து பீஜ மந்திரங் கூடாமல் ஆசமனம், இதயாதிகளினல் அங்க நியாசம், விபூதி தாரணம், சடங்க நியாசம், மார்ச்சனம், அகமருடணம், சிவ மூலமந்திரம், பரமேசுவரி மந்திரம், கணபதி மந்திரம், சுப்பிரமணிய மந்திரம், குரு - ஆதித்தன்-இருடிகள் - மனுடர் - பூதங்கள் - பிதிர்கள் ஆகிய இவர்களுக்குத் தருப்பணம் முதலியவைகளை யுணர்த்துவது.

(ii) சரியையிற் கிரியை: திருக்கோயிலின் நியதிசெய்யுமளவில் சாயையை மிதியாதிருத்தல், எச்சி லுமிழாதிருத்தல், சிவ நின்மாலியஞ் சேரப்பட்ட சண்டேசுரத்தானம், நின்மாலியம் விழும்கோமுகத்தானம் இவற்றைக் கடவாதிருத்தல், பலிபீடத்தையும் இடபதேவரையும் குறுக்கிடாதிருத்தல், தெய்வத் தானங்களிற் கால் நீட்டாதிருத்தல், விரைய வாராமலும் ஒன்று இரண்டு பிரதட்சணம் பண்ணமலுமிருத்தல், திருவலகாற் கிருமிகள் சாகாமல் மேற்பட அலகிடல், சாணகங் கொள்ளுமிடத்து ஈன்றணியதும் நோயுள்ள தல்லாததுமான பசுக்களிற் சாணகம் பூமியிலே விழு முன்னே இலையி லேற்றுக் கொள்ளல், அன்றிச் சுத்த நிலத்தில் விழுந்தால் மேல் கீழ் தள்ளி நடுப்பட வெடுத்து நதி ஓடைவாவியாதிகளில் வடித்தெடுத்த திருமஞ்சனத்தால் மெழுகிடல், நந்தவன முண்டாக்கல், இண்டை-தொடை-கண்ணி - பந்து - தண்டிற் கட்டுவ

---

*மதராஸ் ரிப்பன் அச்சகத்தார் 1924-இல் வெளியிட்ட பிரதியைக் கொண்டு ஒப்பு நோக்கப்பட்டது—தீ. கி. நா.

தாகிய திருமாலைகளை யுண்டாக்கிச் சிவபிரானுக்குச் சாத்தக் கொடுத்தல், திருவேடத்தார்க்கு அடிமைத்தொழில் புரிந்து அவர் ஏவலின் வழியே நிற்றலாகிய இவைகளையுணர்த்துவது.

(iii) சரியையில் யோகம்: எழுகோடி மந்திர வடிவு களைத் தன்னிதயத்திலே தியானிப்பது. அல்லது, நாடோறுந் திருக்கோயில் நியதி செய்யுமிடத்துச் சதாசிவ நாயனர் திருமேனியைக் கீழாதாரசத்தி முதல் மேற் சுத்தமாயை யளவாக அக்கினி சொரூபமான வித்தியாதேகமாகத் தியா னித்து இந்த வளவிலே பதுமராக ஒளிபோலத் திருமேனி யைத் தியானித்துப் பிரதட்சணம் செய்யுமளவில், ஒரு கால் பாதாளத்திலே வலம் வருகிறதாயும், ஒரு கால் பூமியிலே வலம் வருகிறதாயும், ஒரு கால் ஆகாயத்திலே வலம் வரு கிறதாயும், திருக்கோயினியதி நினைத்துச் செய்துவரு நேர மெல்லாம் அந்தத் தழற்பிழம்பான ஒளியுடனே மனப் பற்ருகிச் செய்ய வுணர்த்துவது.

(iv) சரியையில் ஞானம்: ஒன்றையுங் கொலை செய் யாமை, இந்திரியங்களை யடக்குதல், பொறை, உண்மை யன்பு, தியானம், தவம், சத்தியம், சிவனேவலாக அறிவு கோடல் ஆகிய ஞானபுட்ப மெட்டினையும் சாத்தல், சதாசிவ மூர்த்தியையும்-அவன் வேடம் பூண்ட அவனடியாரையும் - அந்த மூர்த்தி மன்னுங் கோயிலையும் அந்தப் பரம்பொரு ளாகவே நிச்சயித்துக் கைக்கொண்டு அதுவே தனது பணி யாகத் தியானஞ் செய்திருப்பதனை யுணர்த்துவது.

2. கிரியை: இந்திரியங்களைச் சிவார்ப்பிதஞ்செய் தல். அதாவது, புறத்தொழில் அகத்தொழில் மாத்திரை யானே முதல்வனுடைய அருவுருவத் திருமேனியை நோக் கிச் செய்யும் வழிபாடு. இது கிரியையிற் சரியை, கிரியை யிற் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம் என நால்வகைப்படும்.

(i) கிரியையிற் சரியை: சலசுத்தி முகசுத்தி செய்து, பிஜ மந்திரத்தோடு கூடிய மந்திராசமனம், விபூதி தாரணம், உருத்திராட்சதாரணம், அக்கினி காரியம், அங்க நியாசம், கர நியாசம், மார்ச்சனம், அகமருடணம், சிவகாயத்திரி செபம், பஞ்சாட்சர செபம் என்பவைகளை யுணர்த்துவது.

(ii) கிரியையிற் கிரியை: புஷ்பம் திருமஞ்சன முதலிய உபகரணங்கள் கொண்டு ஆன்ம சுத்தி, தான சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, இலிங்க சுத்தி என்னும் பஞ்ச சுத்திகளுஞ் செய்து, சிவலிங்கத்தின் பீடத்திலே சத்தியாதி சத்தி பரியந்த பதுமமாகிய சிவாசனம் பூசித்து, அதன்மேல் இலிங்கத்திலே வித்தியா தேகமாகிய மூர்த்தியை நியாசஞ் செய்து, அவ்வித்தியா தேகத்திற்குச் சீவனுயுள்ள நிஷ்கள ரூபரும் சருவ கருத்தாவும் சருவ வியாபகருமாகும் பரசிவனுகிய மூர்த்திமானைத் துவாதசாந்தத்தின் மேலே தியானித்து, முன்னே நியாசஞ் செய்த வித்தியா தேகத்திலே ஆவாகித்து, 'சுவாமீ! பூசையின் முடிவு எதுவரையுமோ அதுவரையும் நீர் அன்புடன் இவ்விலிங்கத்தினிடத்தே சாந்நித்தியராயிரும்' என விண்ணப்பஞ் செய்து பூசித்துத் தோத்திரம் பிரதட்சணம் நமஸ்காரம் முதலியன பண்ணிச் சூரிய பூசையுடன் சிவ பூசையை முடித்தலையுணர்த்துவது.

(iii) கிரியையில் யோகம்: மேதாகலை முதல் உன்மனு கலை யீருயுள்ள சோடச கலைகளுள்ளே மேதாகலை, அர்க்கீசகலை, விடகலை, விந்துகலை, அர்த்த சந்திரகலை, நிரோதி கலை, நாதகலை, நாதாந்தகலை, சத்திகலை, வியாபினிகலை, வியோமரூபினிகலை, அகந்தைகலை, அநாதிகலை, அனுசிருதை கலை, சமனுகலை என்னும் கலைகளிலே தனித்தனி யமைந்து கிடந்த தத்துவம் முதலியவைகளை எல்லாம் இருதயமுதல் சமனுந்தம் வரையும் சோபான முறையாய் அவ்வக்கால மாத்திரையினுள்ளே கடந்து கடந்து சென்று பஞ்சாக்கரத்தின் நாமாக்களிலே வைத்து, சமனுந்தே பாசசாலம் என்றறிந்து அவற்றைக் கழித்துவிட்டு, உன்மனுந்தே பரசிவமெனக் கொண்டு சிவத்தைத் தியானித்து, பின்பு தியானிப்போனுகிய தானும் தியானமும் தோன்ருது தியானப் பொருளாகிய சிவமொன்றே விளங்கப்பெற வுணர்த்துவது.

(iv) கிரியையில் ஞானம்: எல்லா வுயிர்க்கும் அந்தக்கரணங்களுக்கும் ஆதாரமாவது சூக்குும எழுத்தெனக் கண்டு, சூக்குமத்தாலே இதயத்திலே பூசித்து, மூலாதாரத்தில் பிரணவத்திலே அக்கினியை யெழுப்பி ஓமஞ்செய்து, புருவமத்தியிலே விந்துத்தானமாகிய கோதண்டத்தே தியானமுற்றுப் பொருந்தலாம். அல்லது, மூலாதாரந் தொடங்கிப் பன்னிரண்டங்குலத்திலே நாளமாய், அது

முப்பத்தொரு தத்துவமான மாயையளவாய் மலோபதானம் மூன்றும் சுத்த தத்துவமைந்துமாக எட்டும் மலராக்கி, அதற்குட் சிவன் வடிவு வித்தியாதேகமாக்கி, இந்த வடிவுடையவன் சிவனைக் கண்டு அருச்சிப்பது, அல்லது பிரபஞ்சமாகக் காணப்பட்ட வடிவுகளும், காணப்படாத திட்கன வடிவுமாகிய எல்லாவற்றையுஞ் சத்தி வடிவாகக் கண்டு, இதற்குப் பிராணனைச் சிவனைத் தியானித்துத் தரிசித்துக் கைகொண்டு எவ்விடத்தினுமாக அறிவு இரவும் பகலும் விடாமற்கொள்வது ஆக இவற்றைக் குறித்துணர்த்துவது.

3. யோகம் : கரணங்களைச் சிவார்ப்பிதஞ் செய்தல். அதாவது, அகத்தொழின் மாத்திரையானே முதல்வனுடைய அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. இது யோகத்திற் சரியை, யோகத்திற் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம் என நால்வகைப் படும்.

(i) **யோகத்தில் சரியை :** கண்டமளவும் விரல் செலுத்திப் பித்தம் வாங்கலும் சலத்தை வாங்கி யுள்ளே கொள்ளுதலும் செய்து, பிரணவ மந்திரத்தாலே பூரித்துக் கும்பித்து ரேசித்து, அஞ்ஞானம் நீக்கத்தக்கதாக மூன்று காலமும் உத்தூளனஞ் செய்து, தாழைசாற்றால் உப்பும், புளியுஞ் சிராய்ச் சாம்பனிராற் புளியும், கடுக்காயாற் கைப்புமறுத்து, அன்னங் குறைத்துக், கறிகள் நீக்கி, சத்திரயோகம் தூலகன்மமாகிய சங்காரயோக முதல் செய்து வருவதாகிய இயம நியமங்களை முன் செய்து, சங்கிதா மூலமந்திரத்தாலே சிவனை மனத்திற் றியானித்துத் தண்டம் பண்ணிப் பரிவுறு மதனை யுணர்த்துவது.

(ii) **யோகத்திற் கிரியை:** பதினறு மாத்திரை யளவிற்கு வாயுவைப் பூரித்து, அறுபத்தினலு மாத்திரை யளவிற்குக் கும்பித்து, முப்பத்திரண்டு மாத்திரையளவிற்கு ரேசித்தல், பிரணவத்தினை உச்சரித்து வாயுவை உள் வாங்குதல், இருபத்தோராயிரத்தறுநூறு வாயுக்களைத் தினவழியிலே குறைத்தல், இரண்டு நாசியினாலும் வாயுவைப் பல கால் உள் வாங்குதல், புருவமத்தியிலே தியானித்தல், வாயுவைக் கபாலத்தினின்றுந் தோன்றி ஒடுங்கினதாகத் தியானித்தல்,

வாயுவை யடக்கிக் கன்னமூலத்தால் விடுதல், உடம்பைப் பூரிப்பித்தல், வாயுவை எப்போதும் மேனோக்கிச் செலுத்துதல், சித்திரநாடி வச்சிரநாடி சுழுமுனை நாடிகளிலே வாயுவைச் செலுத்துதல், உபத்தத்தால் வாயுவை ஏற்றல், பிரமரந்திரந் திறப்பித்தல், பிரசாத வழியிலே வாயுவைச் செலுத்துதல், நீர் உதிரம் முதலிய தாதுக்களை அடக்குதல் முதலியவைகளை யுணர்த்துவது.

(iii) யோகத்தில் யோகம்: ஞானேந்திரியங்களையும் கன்மேந்திரியங்களையும் உள்ளே யடங்க வொடுங்கியிருந்து, மூர்ச்சிக்கும் பிராணவாயுமுதற் பத்து வாயுவு மியங்காமற் பிராண வாயுவையுங் கபாலத்திலே யடக்கிச் சற்று நேரம் மனத்தினை விகற்பியாது, மூலாதாரம் நாற்சதுரமும், சுவாதிட்டானம் முச்சதுரமுமாக இப்படி ஆறாதாரத்தையும் மூன்று மண்டலத்தையும் அசபா மந்திரத்தைக் கீழ்மேலாக வுச்சரித்து, வாயுவை யேற்றி, மேலே சென்று ஆகாயத்தின் சந்திரகலையிலே அக்கினியோடே யுறைதலினாலே யுருகிவிழு மமுதைக்கொண் டுடலமெங்கும் நிறைத்து, அகாராக்கரத்தினாலே திருக்கூத்தைத் தியானித்து, அந்தத் திருக்கூத்தோடொன்று பட்டவனாகி, அந்த நடனத்தின் வழியிலே தியானமென்றுந் தான மென்று மிரண்டுபடாம லிருந்து தூங்குவதனை யுணர்த்துவது.

(iv) யோகத்தில் ஞானம்: மண்முதலாகச் சொல்லப்பட்ட யாவற்றையும் கருதிக் குறிக்கும் வடிவால், அதாவது, மண்ணைக் குறித்த தியானம் வச்சிர காயஞ்சாதித்தல், நீரைக்குறித்த தியானம் வாயு வுள்ளடக்கிப் பவனமொடுக்கி ஒன்பது வாயிலினும் நீர் செல்லாது அடக்கி நீரில் நடத்தல் கிடத்தல் அகமருஷணஞ் செய்தல் ஆயிரமுகமிருத்தல் முதலிய இயற்றுவது.

தீ: மூலாக்கினியை எழுப்பிக் கபாலத்தை வெடிப்பித்து, உடலை வெந்த புரிபோலாக்கி நெருப்புள் நிற்க இருக்கக் கிடக்கச் செய்வது.

காற்று: வாயுவை யுடலெங்கு மோட்டிக் காயத்தோடாகாயத்திற் செல்லப் பரகாயப்பிரவேசஞ் செய்ய வருதல். வடிவில்லாத ஆகாயம் உடலைச் சூனியமாக்கல், உயிரைச்

சூனியமாக்கல், அறிவைச் சூனியமாக்க லிவையாம். இத னல் அணிமா மகிமாவுமாம்.

ஒளி: நாசி நுனி புருவமத்தியம் விளக்குள்ளொளி மின்னொளி விந்துவொளி உள்ளொளி முதலான ஒளிகளைத் தியானிக்கை.

சூனியம்: எல்லாந் தன்னிடமாகத் தானெங்குஞ் செல்ல வியற்றுகை. வாயுவை நிறைவாகக் கண்டு அந்நிறை வோடு அறிவு நிறைதலாம்படி நிற்றல்.

அக்கரங்கள்: ஔகாராதி அக்கரங்களைத் தனித்தனியே தியானித்தல்.

விந்து: குறித்த பொருளிலே யுரைப்பதும், அதிலே யடங்கச் சங்கு கடல் மணிபோல வோசை யெழுவது. இவை யாதியவற்றின் கூறிய நிலையே நிலையாக இவற்றென் றின் வடிவாய் அந்த நிலையிலே மனமும் வாயு மடங்க அவை தானே அறிவுமாய் வேறு சற்றும் ஊண் உறக்கங்களிலும் பேதியாமல் அவ் வுண்மையின் மனக்கவலையிற் றென்று பட்டதாகக் கண்டுகொண்டு நின்ற அத்தன்மைகள் பெறு வது ஆகிய இவற்றை யுணர்த்துவது.

4. ஞானம்: ஆன்மாவாகிய தன்னைச் சிவார்ப்பிதஞ் செய்தல்; அதாவது, புறத்தொழில் அகத்தொழி லிரண்டு மின்றி அறிவுத்தொழின் மாத்திரையானே உருவம் அரு வுருவம் அருவம் என்னு முத்திறத் திருமேனி கடந்த அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நிறைந்துநின்ற முதல்வனிடத்துச் செய்யும் வழிபாடு ஞான மெனப்படும். இது ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என நால்வகைப்படும்.

(i) ஞானத்திற் சரியை: ஞானத்தி னிற்பார் நயிட்டிக ரென்றும், சாதகரென்று மிருவகையாவர். அவரின் நயிட் டிகராவார் சந்தத நிட்டையிலே யிருப்பர். அவர்க்குச் சரியை முதலான கிரியை செல்லாதாம். சாதகியா வுள்ள வர்க்கு முன்னே சொல்லப்பட்ட ஞானத்திற் சரியை சொல்லப்படும்; அதாவது, யானெனதென்னுந் தன்மையுட னிராக்கால மெல்லாஞ் சூக்குமவுடலிலேயே புசிப்பித்துக்

கொண்டு நின்ற முறைமையுங் கண்டு, மீளவுந் தூல தேகத்திலே கூடின முறைமையு மறிந்து, சுத்தசலத்தான் முக சுத்தி முதலானவை செய்து, பஞ்சாக்கரங் கூடின ஈசானுதியாலே திருநீறு சாத்தி, தத்துவங்கள் முப்பத்தாறுஞ் சுத்தமாகிறதாகக் கண்டு ஆசமனம் பண்ணி, நியாசஞ் செய்து தர்ப்பித்துவிடுவது முதலிய வுணர்த்துவது.

(ii) ஞானத்திற் கிரியை: பிருதிவியாதி தத்துவங்களைச் சடமெனக் காண்டலாகிய பூதசுத்தியும், திருவருளானன்றி அங்ஙனம் ஆன்மா அறியாதெனக் காண்டலாகிய ஆன்ம சுத்தியும், கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றனவெல்லாந் திருவருளெனக் காண்டலாகிய திரவியசுத்தியும், திருவைந் தெழுத்தைச் சிவ முன்னாகக் கணித்தலாகிய மந்திரசுத்தியும், யாண்டும் நீக்கமற வியாபித்துநிற்கு முதல்வன் இவ் விலிங் கத்தினு முளன் எனக் காண்டலாகிய இலிங்கசுத்தியும் ஆக ஐந்து சுத்தியுஞ் செய்து வழிபடுதலை யுணர்த்துவது.

(iii) ஞானத்தில் யோகம்: எழுத்துக்களைந்தும் சத்தியும், அவற்றின் பொருள் சிவமுமாம். இவ்வகையன்றிச் சிவ னெழுத்து முதலும், சத்தியெழுத்து இரண்டாவதும், உயிர் எழுத்து மூன்ருவதும், திரோதானவெழுத்து நாலாவதும், மலவெழுத்து ஐந்தாவதும் அடைவுபெற்று நிற்குமாகையால், இவ்வெழுத்தைச் சொன்ன அடைவி லுச்சரியாது திரோதமலம் கடையாயிருப்பதைத் தலையிலேயாகக் கொள்ளுவது, தியானிக்குங் காலத்திற் போக வழியாய் விடுமல்லது முத்திவழியாகாது. இவ்வெழுத்தை ஞான வழியாகப் பார்த்துச் சிவனாலே சத்தியும், சத்தியாலே ஆன்மாவும், ஆன்மாவைப் பற்றிப் போகத்தைக் காட்டுந் திரோதமும், அத் திரோதத் தானடக்குமலமுமென்று தெரிசித்து உச்சரிக்குநேரத்தில் ஆன்மாத் திரோத முதலான வுச்சாரணையி லான்மாப் பின்னின்று முன்னாய்த் திரோதமே பற்றும் பொருளை யுணர்ந்து வேறுபாடின்றி யொன்ருென் ருகிய திரோதங் கூடாமல் திரோதமல நிலைகளை ஆன்மா விட்டு அருளிலே யுற்று நிற்குநிலையாக வுச்சரித்தால அவ் வுச்சாரணங் குற்றமற்ருன்மா நடுவேயாய்ப் பற்றுஞ் சிவத் திலே ஆன்மாக் கருத்தே கொண்டு நாட எப்போது முச் சரிப்பதனை யுணர்த்துவது.

(IV) ஞானத்தில் ஞானம்: பெத்தர்களாயினோர் மருண் மேலீட்டினாலே சிவமுற்றும் தோன்றப்பெறாது பிரபஞ்ச வாசனையோடு நிற்குநிலைபோல, முத்தர்களாயினோர் அருண் மேலீட்டினாலே பிரபஞ்சவாசனை முற்றுந் தோன்றப் பெறாது சிவத்தோடு அத்துவிதமாய் நிற்கும் நிலைமை உணர்த்துவது.

சாதன சங்கிரகம்

1. சரியையிற் சரியை: திருக்கோயிலில் அலகிடல் மெழுகல் முதலியன. சரியையிற் கிரியை: ஒரு மூர்த்தியை வழிபடல். சரியையில் யோகம்: நெஞ்சின்கண் முதல்வனைத் தியானஞ் செய்தல். சரியையில் ஞானம்: தியான பாவனையின் உறைப்பினால் ஓரனுபவ வுணர்வு நிகழ்தல்.

2. கிரியையிற் சரியை: பூஜைக்கு வேண்டப்படும் உபகரணங்களெல்லாம் செய்துகோடல். கிரியையிற் கிரியை: ஆகமத்தில் விதித்தவாறே ஐவகைச் சுத்தி முன்னாகச் செய்யும் பூஜை. கிரியையில் யோகம்: அகத்தே பூஜை, ஓமம், தியானம் மூன்றற்கு மூவிடம் வகித்துக்கொண்டு செய்யப் படும் அந்தரியாகம். கிரியையில் ஞானம்: அந்தரியாக வுறைப்பின்கண் நிகழும் ஓரனுபவ வுணர்வு.

3. யோகத்திற் சரியை: இயமம், நியமம், ஆசனம், பிராணயாமமென்னு நான்குமாம். யோகக் கிரியை: பிரத்தியாகாரமும் தாரணையும். யோகத்தில் யோகம்: தியானம். யோகத்தில் ஞானம்: சமாதி.

4. ஞானத்திற் சரியை: கேட்டல். ஞானத்திற் கிரியை: சிந்தித்தல். ஞானத்தில் யோகம்: தெளிதல். ஞானத்தில் ஞானம்: நிட்டை கூடுதல் (அத்துவித நிலை).

——

26—6—'56 : திருவாமாத்தூர் கௌமார மடாலயம் கண்டபாணி சுவாமிகள் குருபூஜை. பாலயோகி, இராமதாச சுவாமிகள் சொற்பொழிவு.

அடியார் மன்றம், பவழக்காரத் தெரு, சென்னை. M. P. S. வேலாயுதம் அவர்களால் சென்ற ஒரு ஆண்டாக நடைபெற்று வருகின்றது. ஆண்டு நிறைவின்போது குழந்தைவேலு முதலியார், திருப்புகழ்மணி, பண்டித இராமநாதபிள்ளை, சண்முகசுந்தரஞ் செட்டியார், சச்சிதானந்தம் பிள்ளை முதலியோர்கள் அறிவுரைகள் நிகழ்த்தினார்கள். சைவத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் ஒரு பிடி அரிசியும் காலணாவும் சைவசமய வளர்ச்சிக்கு ஒவ்வொரு நாளும் ஒதுக்கிவைக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. திருப்போரூர் அடிகளார் ஆசியுரை கூறினார்.

சென்னைச் சிவனடியார் திருக் கூட்டம். திருக்கழுக் குன்றம் திருமுறை இன்னிசைப் பெருவிழா நடத்தினார்கள். எட்டு நாட்கள் நடந்தன. பல பெரியார்கள் கலந்து கொண் டார்கள். இளவழகனார் பெரும் முயற்சியில் நடைபெற்றது.

மதிப்புரை

மதுரை தமிழ்ச் சங்கத்துப் பொன்விழா மலர் :— விலை ரூபாய் மூன்று. இந்த ஆண்டு எழுநாட்கள் இயல், இசை, நாடகம் என்ற முப்பெரும் பிரிவுகளும் வெகு சிறப்பாக நடைபெற்றன. திரு. P. T. ராஜன் அவர்கள் முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. கட்சிபேதம் இன்றி எல்லாத் தமிழன்பர்களும் கலந்து கொண்டார்கள். இறுதி நாள் இலங்கை முன்னாள் அமைச்சர் சர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமை வகித்துச் சிறப்பித்தார்கள். அப்போது வெளியிட்ட பொன்விழாமலர் மிகச் சிறந்த முறையில் வெளி யிடப்பட்டுள்ளது. அதில் அடங்கியிருக்கும் கட்டுரைகள் தமிழ் நாட்டுப் பெருமையை விளக்குகின்றன. தமிழ் நாட்டுச் சிறந்த பெரியோர்களின் உருவப்படங்கள் அடங்கியுள்ளன. சமயக் கொள்கைகள், தமிழ் நூற்பெருமைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், இயலிசை நாடகக் கருத்துகள், ஆலய அமைப்பு முதலிய பல செவ்விய பொருள்களும் அடங்கியுள்ளன. தமிழன்பர்களுக்கும் மாணவர்களுக்கும் நல்லதொரு விருந்

தாக இப் பொன்விழாமலர் விளங்குகின்றது. விலை மிக எளிது தமிழ் மக்கள் எல்லோரும் படித்து இன்புறுவார்களாக.

தில்லை நடராஜப் பெருமான் கும்பாபிஷேக மலர் :— அண்மையில் நடராஜப்பெருமான் திருக்கோவில் செப்பனிடப் பட்டதை முன்னிட்டு பெரும் செலவில் கும்பாபிஷேகம் நடைபெற்றதை அறிவோம். அதில் ஆடூர் பிள்ளையவர்களும், நகைக் கடை இரத்தினசாமிச் செட்டியார் அவர்களும் பெருந் தொகை கொடுத்து நடத்திவந்ததை அறிவோம். அதைப் பற்றிய வெளியீடு தற்போதுதான் அழகிய முறையில் வெளி வந்துள்ளது. பல வன்னங்கள் கொண்ட பெருமான் படங் களும், ஆலய அமைப்புகளின் படங்களும், விழாவில் பங் கெடுத்துக்கொண்ட பெரியார்களின் படங்களும் அடங்கி யுள்ளன. சிவக்கவிமணி முதலிய பெரியோர்கள் சைவத்தைப் பற்றிப் பல கட்டுரைகள் எழுதியிருக்கின்றார்கள். மலரானது கண்ணைக்கவரும் முறையில் வெளியிடப் பட்டுள்ளது. அனைவரும் படித்துப் பேரின்பமுறுவார்களாக.

பிரிவாற்றுமை

சிறந்த சைவ ஒழுக்கம் உடையவரும், 1945-ஆம் மகாமக விசேஷ மகாநாட்டை நமது சமாஜச் சார்பில் தமது சொந்த செலவில் நடத்தியவரும், சைவ சேனாபதி முதலிய பல பட்டங்கள் பெற்றவரும், சைவ சித்தாந்த சாத்திரங்களையும் திருமுறைகளையும் இடைவிடாது, பயில்பவரும், சிவபூஜா துரந்தரரும், கும்பகோண வாசியு மாகிய திருவாளர் ப. இ. சொ. குமாரசாமிசெட்டியார் அவர்கள் 29—6—56ல் சிவபதம் அடைந்த செய்தியை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அவருடைய வாழ்க்கை வரலாறு அடுத்த இதழில் வெளி வரும். (ம-பா.)

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi Edited by C M Ramachandran Chettiar, B .A, .B.L., and Published by S.Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 10, Monteeth Road, Egmore Madras-8